# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 05 திங்கட்கிழமை (22-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:330


கடற்படை - கடற்புலிகள் இடையே

## வடக்குக் கடலில் நேற்று பலமணி நேரம் கடுஞ்சமர்!

கொழும்பு,ஒக்.22

வடக்குக் கடலில் நேற்று முற்பகல் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே பலமணி நேரம் கடற்சண்டை இடம்பெற்றிருக்கிறது.

'வருண கிரண' என்ற பெயரில் நிரந்தர கடல் முற்றுகை நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் கடற்படையினர் நேற்று முற்பகல் 10.10 மணியளவில் வடக்குக் கடலில் பருத்தித்துறைக்கு கிழக்கே விடுதலைப் புலிகளின் ஐந்து படகுகளை எதிர்கொண்டபோது அங்கு மோதல் வெடித்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்த மோதலில் விடுதலைப் புலிகளின் மூன்று படகுகள் தகர்த்தழிக்கப்பட்டதாகவும் -

ஏனைய படகுகள் கடற்படையினரின் தாக்குதல்களினால் மூழ்கிப் போனதாகவும் -

இப்படகுகளில் இருந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சுமார் 20 பேர் காயமடைந்து அல்லது உயிரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய கடற் சமரில் 5 புலிகள் உயிரிழப்பு!

வவுனியா,ஒக்.22

வடக்குக் கடலில் நேற்று கடற்படையினருடன் இடம்பெற்ற மோதலில் தமது தரப்பில் கடற்கரும்புலி ஒருவர் உட்பட ஐவர் களப்பலியானதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

- கடற்கரும்புலி மேஜர் றோஜா (கணேசன் கற்புக்கரசி - யாழ்ப்பாணம்)
- கப்டன் செந்தளிர் ( தீசிதோர் மேரிலூயிஸ் - யாழ்ப்பாணம்)
- லெப்டினன்ட் வினோதன் (லோகேஸ்வரன் திலீப்குமார் - கிளிநொச்சி)
- கப்டன் செல்லப்பன் (இராசையா மகேந்திரன் - வவுனியா)
- மேஜர் சிவா (வேலாயுதம் தயாபரன் - யாழ்ப்பாணம்).(ஐ-164)

# தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்த மீண்டும் புலிகளுக்கு அரசு அழைப்பு!

## லக்ஷ்மன் கதிர்காமர் பேட்டி



கொழும்பு,ஒக்ரோபர்22

**அரசு - புலிகள் இரு தரப்பினருக்கும் இடையிலான இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று தாம் கருதுவதாக வெளிவிகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகின்றார்.**

**பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் யுத்தநிறுத்தம் செய்ய வருமாறு புலிகளுக்கு அரசு விடுத்த அழைப்பு இன்னும் நடைமுறையில் உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.**

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார். "இராணுவ நடவடிக்கைகளைக் கூட்டாக நிறுத்துவதற்கு புலிகளுக்கு விடுத்த அழைப்பை அரசு புதுப்பிக்கின்றது" - என்ற தலைப்பில் வெளியான அப்பேட்டியில் கதிர்காமர் தெரிவித்துள்ள கருத்துக்களின் சாராம்சம் வருமாறு:-

அரசைப் பொறுத்தவரை யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் விருப்பத்தில் அது உறுதியாக உள்ளது. இந்தத் தேசியப் பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு என்று அரசு திரும்பத்திரும்ப பல தடவைகள் கூறி வந்துள்ளது. இந்தத் திசையில் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தலிபான் தலைவர் தாக்குதலில் உயிரிழப்பு?

காபூல்,ஒக்.22

ஆப்கானிஸ்தானில் கந்தகார் அருகே அமெரிக்க கொமாண்டோ படைகளுடன் இடம்பெற்ற சண்டையில் ஆளும் தலிபான் இயக்கத்தின் அதிஉயர் தலைவர் முல்லா முஹமட் ஓமர் உயிரிழந்து விட்டதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

முல்லா முஹமட் ஓமர் உயிரிழந்ததை ஆப்கானில் உள்ள மருத்துவர் ஒருவர் ஊர்ஜிதம் செய்ததாக பி.பி.ஸி. செய்தி நிறுவனத்தை மேற்கோள்காட்டி நேற்று நள்ளிரவு வெளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### டக்ளஸ் வவுனியாவில்

வவுனியா,ஒக்.22

அமைச்சரும் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா நேற்று வவுனியாவுக்குச் சென்று அங்கு தங்கியுள்ளார்.

பொதுத் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகவே அவர் வவுனியாவுக்கு விஜயம் செய்துள்ளதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா - மன்னார் வீதியில் அமைந்துள்ள ஹேர்க்கிட் பங்களாவில் அமைச்சரும் அவரது குழுவினரும் தங்கியுள்ளனர். இதனால் அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீதிகள் சில போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருக்கின்றன. (ஐ-9-164)

ஆட்சிக்கு வந்தவுடன்

## சகல தரப்புகளும் ஏற்கும் தீர்வை முன்வைப்போம்!

### ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு



கொழும்பு,ஒக்.22

நாட்டை அழிவில் இருந்து மீட்பதற்காக விரைவில் உதயமாகவுள்ள புதிய அரசு, யுத்தத்தை உடன நிறுத்தி, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சகல தரபபும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை முன்வைக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

ஐக்கிய தேசிய முன்னணியின் பேராளர் மாநாடு நேற்றுக் காலை கொழும்பு நகர மண்டப வளாகத்தில் நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சி, இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் பொ.ஐ. முன்னணியில் இருந்து வெளியேறிய அணி ஆகியன இணைந்து ஐக்கிய தேசிய முன்னணி என்ற அமைப்பின் கீழ் போட்டியிடு (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பின்னால் தமிழ் இனம்; இதை உணர்த்தவே எமது கூட்டமைப்பு!

### விநாயகமூர்த்தி கூறுகின்றார்



யாழ்ப்பாணம்,ஒக்.22

தமிழ் இனம் விடுதலைப் புலிகளுக்குப் பின்னால் திரண்டுள்ளது என்பதைச் சர்வதேச சமூகத்துக்கும் பேரினவாதிகளுக்கும் வெளிப்படுத்திக் காட்டவே நான்கு கட்சி கூட்டமைப்பை ஏற்படுத்தினோம்.

- இவ்வாறு தெரிவித்தார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவிநாயகமூர்த்தி.

நான்கு கட்சிக் கூட்டமைப்புக் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலம்பெயர்ந்தோர், பல்கலைக் கழக மாணவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பல தரப்பினரின் கோரிக்கைக்கு இணங்கியும் -

அமரர் குமார் பொன்னம்பலத்தின் கொள்கை, கோட்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவும் -

தமிழினம் புலிகளுக்குப் பின்னால் திரண்டுள்ளதை எடுத்துக்காட்டவுமே - (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பொலீஸார் மீது கிரனேட் வீச்சு!

வவுனியா,ஒக்.22

வவுனியா பண்டாரிக் குளம் பகுதியில் நேற்று மாலை 6.45 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் நடத்திய கிரனேட் தாக்குதலில் பொலஸார் ஒருவர் படுகாயமடைந்தார்.

வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இச் சம்பவத்தை அடுத்து பண்டாரிக்குளம் பகுதியில் வேட்டுச் சத்தங்கள் சரமாரியாகக் கேட்டன. இதனால் அங்கு பதற்றம் நிலவியது.

நேற்றிரவு பொலீஸாரும், படையினரும் இணைந்து அப்பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர். (ஐ-9-164)

யாழ். ஆஸ்பத்திரியில்

## மருந்துத் தட்டுப்பாடு என்று கூறப்படுவது முழுப்பொய்!

### பி.பி.ஸிக்கு டக்ளஸ் பேட்டி

லண்டன்,ஒக்.22

யாழ்.ஆஸ்பத்திரியில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் - அங்கு பல அடிப்படை வசதிகள் இல்லை என்றும் - கூறப்படுவது முழுப்பொய்யான தகவலாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் அமைச்சரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா.

பி.பி.ஸியின் தமிழோசைக்கு நேற்றிரவு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கடந்த காலங்களில் நான் அதிக நாள்களை யாழ்ப்பாணத்தில் செலவிட்டிருக்கிறேன், அங்கு அடிப்படை வசதிகள்கூட இல்லை என்று கூறப்படுவது முழுக்க முழுக்கப் பொய்யான செய்தியாகும். எத்தகைய பிரச்சினைகளாயினும் எமது கவனத்துக்குக் கொண்டு வருமாறு ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்குத் தெரிவித்துள்ளோம். அப்படி முறையிடப்பட்ட பல பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட்டிருக்கின்றது - என்றும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக் கரையோரம் நேற்று விமானக் குண்டுவீச்சு!

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரக் கிராமங்கள்மீது நேற்று மாலை விமானப்படையின் 'மிக்' மற்றும் 'கிபிர்' விமானங்கள் கடும் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டதாக வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இத்தாக்குதல்களினால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

இதேவேளை - புதுமாத்தளன், அம்பலவன், பொககணை மற்றும் வலையன்மடம் ஆகிய கிராமப் பகுதிகள் மீது நேற்று இடம்பெற்ற விமானத் தாக்குதல்களால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது. இத்தாக்குதல்களினால பலர் காயமடைந்ததாகவும், கடலில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் கரை திரும்ப முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ஐ-9-164)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மு.காங்கிரஸ் 6 மாவட்டங்களில் ஐ.தே.முன்னணியுடன் போட்டி!

கொழும்பு,ஒக்.22

திருகோணமலை, வன்னி உட்பட ஆறு மாவட்டங்களில் ஐக்கிய தேசிய முன்னணியின் பட்டியலில் போட்டியிடுவதென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

கட்சியின் செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றபோது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடுவதென கட்சியின் அரசியல் உயர்பீடம் எடுத்துள்ள முடிவை செயற்குழு அங்கீகரித்தபோதும் -

அம்பாறை மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்த கட்சித் தலைவர் ஹக்கமுக்கு செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு மூன்று இடங்களை ஒதுக்க ரணில் முன்வந்தால் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு கட்சி முன்வரும் என்றும் -

இரு தலைவர்களும் இது சம்பந்தமாக நேற்றிரவு சந்தித்துப் பேச்சு நடத்த இருந்தனர் என்றும் -

கட்சியின் பேச்சாளர் ஹபீஸ் தெரிவித்தார்.

இரு கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடத் தயாரான நிலையில் உள்ளது என்றும் -

நேற்றிரவு நடைபெறுவதாக இருந்த பேச்சுக்களில் எட்டப்படும் முடிவுகளின்படி இந்த ஒப்பந்தத்தில் சில மாற்றங்கள் செய்யப்படலாம் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பணிகளைக் கண்காணிக்க விசேட குழு ஒன்று தலைமையகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் என்றும் அவர் கூறினார். (ஐ-3)

# மிதிவெடியில் சிக்கியவர் இரத்தப்போக்கால் மரணம்!

## கெருடாவில் பகுதியில் சம்பவம்

சாவகச்சேரி,ஒக்.22

சாவகச்சேரி, கெருடாவில் பகுதியில் உள்ள தனது வீட்டைப் பார்த்து வரச்சென்ற ஒருவர் அங்கு மிதிவெடியில் சிக்கி உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நாகமுத்து சின்னத்துரை (வயது 47) என்பவரே உயிரிழந்தவராவார்.

மிதிவெடியில் சிக்கிய இவர் இரண்டு கால்களும் சிதறுண்ட நிலையில் அவ்விடத்திலேயே நீண்ட நேரம் கவனிப்பாரின்றிக் கிடந்ததாகவும் -

பின்னர் படையினர் சிலர் அவரை அங்கிருந்து மீட்டதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவில் இரத்தம் வெளியேறிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், பின்னர் அங்கு மரணமானார். (ஐ-31)

## நூலகம் புனரமைப்பு

கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தின் நூலகத்தை விரைவில் புனரமைப்புச் செய்வது என்று நிலையத் தலைவர் இ.தவராஜலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிலைய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## கட்டாயக் கல்வி பிரசாரம

வலி.வடக்கு,ஒக்.22

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் கட்டாயக் கல்வியை வலியுறுத்தும் பிரசார நடவடிக்கையில் சாந்திகம் உளவளத்துணை நிலையத்தினரின் சமூகமேம்பாட்டுத் திட்ட அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் பகுதியில் உள்ள கோணப்புலம் முகாம், மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை முகாம் ஆகியவற்றில் தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (ஐ-86)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தின் 20ஆவது பட்டமளிப்பு விழாவில் "முதுகலைமாணி"ப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட

அளவையூர்

**அருட்கவி சீனியர் விநாசித்தம்பி ஐயா**

அவர்களை மனமாரப் பாராட்டுவதுடன் அவரின் அருளாசி மேன்மேலும் கிடைக்கப்பெற எல்லாம்வல்ல ஸ்ரீநாகவரத நாராயணனைப் பிரார்த்திக்கின்றோம்.

- மேனகா அச்சகம்.

*342, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*

(C/18807)



## இதய அஞ்சலிகள்



தன் கல்விப் புலமையைக்
கடைசிவரை இந்த மண்ணுக்கு
உவர்ந்தளித்துவிட்டு விழிகளை
மூடிக்கொண்ட

**பேராசான் செ.பாலச்சந்திரனுக்கு**

எமது நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலிகள்.

தலைவர், உறுப்பினர்கள்,
பணியாளர்கள்,
நல்லூர் பிரதேச சபை.

(c/18805)



## கண்ணீர் அஞ்சலி

எங்கள் நண்பன்
திரு. T.தயாளன் அவர்களின் மாமனார்

**செ.பாலச்சந்திரன்**

இறைவனடி சேர்ந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

S.T.P. Computer World (Pvt) Ltd,
Kantharmadam.

(93709)



## மரண அறிவித்தல்

**சி.முருகப்பா**

புதுக்குளம், கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த சி.முருகப்பா நேற்று (21.10.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், நல்லதம்பி (சிறுவர் இல்லம், யாழ்ப்பாணம்), சின்னத்தம்பி (கிளை முகாமையாளர், கட்டைவேலி, ப.நோ.கூ. சங்கம்), சின்னத்துரை (இலங்கை மின்சார சபை, சுன்னாகம்), இரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2001) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*புதுக்குளம்,*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

(C/18806)

தகவல்:
மு.சின்னத்துரை
(மகன்)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




பிறப்பு 09 ☆ 04 ☆ 1919

இறப்பு 02 ☆ 11 ☆ 2000

**சிவக்கொழுந்து நாகரத்தினம்**

(இரத்தினம்)

தாயோடு அறுசுவை போம் தந்தையோடு கல்வி போம்
சேயோடு தான் பெற்ற செல்வம் போம் உற்றார் உடன்
பிறப்போடு தோற்வலிபோம் பொற்றாலியோடு எவையும் போம்
முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாள் சுமந்து
அந்தி பகலாய்க் கண்விழித்து பையன் என்றபோதே பரிந்தெடுத்து
செய்ய இரு கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி? எத்தனை செல்வங்கள் வந்தாலும்
எத்தனை இன்பங்கள் தந்தாலும் அத்தனையும் ஒரு தாய்க்கு
ஈடாகுமோ? ஈடாகாது.



பிறப்பு 10 ☆ 05 ☆ 1956

இறப்பு 20 ☆ 05 ☆ 2000

**சிவக்கொழுந்து தேவராஜா**

(ராசா)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.
உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு
எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தாவடியூர் அருள்மிகு அம்பலவாண வேத விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும்:
அன்பு மகன்: சிவக்கொழுந்து சிவலிங்கம்
மகள்: பொன்.மதிமுகராஜா விஜயலட்சுமி
மருமகன்: காலஞ்சென்ற பொன்.மதிமுகராஜா (TULF)
(தமிழர்விடுதலைக் கூட்டணி)
பேர்த்தி: விஜயமதி, கஸ்தூரிமதி
பாசமிகு பேரன்: மதிமுகராஜா விஜயகாந்த் (விஜய்)
மதிமுகராஜா விஜயவர்மன் (வர்மன்).

விஜய் வீடியோ சென்ரர்,
போட்டோ அன் வீடியோ
தாவடி வடக்கு,
கொக்குவில்.

*"ஸ்ரீ முருக பவனம்"*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

(93690)

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக
அனுசரணையுடன்
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம்
நடத்தும்
விபுலானந்தன் ஞாபகார்த்த
மின்னல் வேக
கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி
(ஆண்கள்)
(பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு மட்டும்)
விண்ணப்பமுடிவு திகதி: 26-10-2001
மேலதிக விவரங்களுக்கு : செல்வி E.அருளம்பலம்
உடற்கல்வி அலகு, யாழ்.பல்கலைக்கழகம்.
(93689)


## கண்ணீர் அஞ்சலி



யா/பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதியும்
புவியியற்றுறை பேராசிரியரும்
எமது நண்பருமாகிய

**செ. பாலச்சந்திரன்**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைந்தோம். மேலும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

" ஆரணி மில்ஸ்"
இலுப்பையடிச்சந்தி நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (93697)

வை.அருணகிரி குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியும்
புவியியற்றுறை பேராசிரியருமாகிய

**செ. பாலச்சந்திரன்**

அவர்களின் மறைவையிட்டு வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய பரிபாலனசபையினர் வழங்கும் கண்ணீர் அஞ்சலி.

*சைவ முத்தமிழும் பேணி*
*சான்றோனாய் வாழ்ந்த நின்.*

பிரிவால் வாடும் குடும்பத்தினரின் கவலையில் பங்குகொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சிற்பனை,
வேலணை. (93693) - பரிபாலன சபையினர்.

## இதய அஞ்சலி



எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய
யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி, புவியியற் பேராசிரியர்

**செல்லத்துரை பாலச்சந்திரன்**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா எம்பெருமானின் திருவடி நிழலில் சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பதில் கலைப்பீடாதிபதி, பேராசிரியர்கள்,
துறைத்தலைவர்கள்,
சிரேஷ்ட விரிவுரையாளர்கள்,
விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.

கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம். (C/18802)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக
கலைப்பீடாதிபதி, பேராசிரியர்

**செ.பாலச்சந்திரன்**



அவர்களின்
பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மன்னார் மாவட்ட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(93692)

## இதய அஞ்சலி



எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய
கலைப்பீடாதிபதி, பேராசிரியர்

**செல்லத்துரை பாலச்சந்திரன்**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா எம்பெருமானின் திருவடி நிழலில் சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பேராசிரியர்கள், துறைத்தலைவர்கள்,
சிரேஷ்ட விரிவுரையாளர்கள்,
விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும்
துறைசார் ஊழியர்கள்.

இந்துநாகரிகத்துறை,
சமஸ்கிருதத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம். (C/18801)

## தீவிரவாதிகளின் அடுத்த இலக்கு இணையத் தளமாம்

அமெரிக்காவில் இணையத் தளங்கள் மீதான வைரஸ் தாக்குதல்களில் பயங்கரவாதிகள் ஈடுபடலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மீது கடந்த செம்ரெம்பர் 11ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையும் 'அந்திரெக்ஸ்' கிருமித் தாக்குதல்களையும் தொடர்ந்து அமெரிக்க இணையத் தளங்களைத் தாக்கும் முயற்சியில் பயங்கரவாதிகள் ஈடுபடலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்க சமஷ்டி புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

## இந்தியா - பாகிஸ்தான் படைகள் மோதல்

இந்திய, பாகிஸ்தானிய எல்லைப் பகுதியில் இருநாட்டு இராணுவத்தினரும் நேற்றுமுன்தினம் இரவு மோதலில் ஈடுபட்டனர். இந்தியக் கட்டுப்பாட்டுக் காஷ்மீரின் எல்லையிலேயே இந்த மோதல் இடம்பெற்றது.

பாகிஸ்தானியப் படைகளே முதலில் தாக்குதலை மேற்கொண்டதாகவும் -

இந்திய இராணுவம் நடத்திய பதில் தாக்குதலில் பாகிஸ்தானியப் படையின் 3 காவலரண்கள் அழிக்கப்பட்டதாகவும் - இந்தியா தெரிவித்தது.

இதனை மறுத்துள்ள பாகிஸ்தான் இந்திய இராணுவமே தாக்குதலை ஆரம்பித்ததாகக் கூறியது.

இருதரப்புப் படைகளுக்கும் இடையேயான மோதலில் சிக்கி, இந்தியப் பகுதியில் வசிக்கும் இரு பொதுமக்கள் காயமடைந்ததாகச் சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த ஒருவார காலமாக எல்லைப் பகுதிகளில் இந்திய - பாகிஸ்தானியப் படைகள் மோதல்களில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (ஏ-7)

## 'அல்கெய்டா' சூளுரை

அமெரிக்கப் படைவீரர்களைக் கொன்று, அவர்களது உடல்களை ஆப்கானிஸ்தானிய வீதிகளில் இழுத்துச் செல்லப்போவதாக 'அல்கெய்டா' அமைப்பின் தளபதி ஒருவர் சூளுரைத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் தரையிறங்கியுள்ளதை அடுத்தே இந்த எச்சரிக்கைச் சூளுரையை அவர் விடுத்துள்ளார். (ஏ)

## பின்லேடனின் சகா கிரனேட் வெடித்து மரணம்

இஸ்லாமாபாத்,ஒக்.22

ஒஸாமா பின்லேடனின் நெருங்கிய சகாவான ஆபூபக்கீல் அல்மஷ்ரி கைக்குண்டு ஒன்றைக் கையாண்டபோது, அது தவறுதலாக வெடித்ததில் உயிரிழந்ததாக அல்கெய்டா தெரிவித்தது.

அமெரிக்க விமானத் தாக்குதலில் இவர் கொல்லப்பட்டதாக முன்னர் செய்தி வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஏ-7)

## ஆப்கானுக்கு கடன் வழங்க இந்தியா தயார்

புதுடில்லி,ஒக்.22

ஆப்கானிஸ்தானில் தற்போதைய விவகாரங்கள் முடிந்து, பரந்த அளவிலான ஓர் அரசு அமையுமானால், 500 கோடி ரூபா கடன் உதவியை ஆப்கானிஸ்தானுக்கு வழங்குவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிய அரசின் உளவு நிறுவனமே தலிபான்களை உருவாக்கியதாகவும் இந்திய அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

## சி.என்.என்.நிறுவன பணியகம் மீது தாக்குதல்

பெஷாவர்,ஒக்.22

ஆப்கானின் கந்தகார் நகர் மீது அமெரிக்க விமானங்கள் நடத்திவரும் தாக்குதல்களில் சி.என்.என். செய்தி நிறுவனத்தின் பணிமனையும் சேதமடைந்தது.

ஆயினும் அங்கிருந்த சி.என்.என் பணியாளர்கள் காயமின்றி உயிர்தப்பினர். இந்தத் தாக்குதலில் 20 பேர் உயிரிழந்ததாக தலிபான்கள் கூறியுள்ளபோதும், இதற்குச் சான்றுகள் இல்லை என்று வெளிநாட்டு செய்தியாளர்கள் தெரிவித்தனர். (ஏ)

## ஈராண்டு இதயக்குமுறல்கள்



அன்னையின் மடியில் 21 - 05 - 1971

அதர்மத்தின் கையில் 15 - 10 - 1999

**அமரர் கணபதிப்பிள்ளை பத்மநாதன்**

(மாமா)

*(உபதலைவர், பூங்காவன விழாக்குழு,*
*தென்புலோலி புற்றாளை சித்தி விநாயகர் ஆலயம்)*

பொன் ஒலிகள் ஒலிக்கும் - ஒழித்தவர்கள்
வீண் ஒலிகள் ஒழியும் வரை
நீதிக்கான ஒலிகள் ஒலிக்கும்
காலங்கள் பதில் சொல்லக் காத்திருக்கின்றன.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தந்தை, சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிமார்கள்,
மருமக்கள், பெறாமக்கள் மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

சாரையடி,
புலோலி. (93694)

## கண்ணீர்க் காணிக்கைகள்



யாழ்.பல்கலைக்கழகக்
கலைப்பீடாதிபதி, பேராசிரியர்

**செ.பாலச்சந்திரன்**

அவர்களின் மறைவையொட்டி கண்ணீர்க்காணிக்கை செலுத்தி துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம். (93700)

யாழ். பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப்படிப்பு
மாணவர் ஒன்றியம்.

## கண்ணீர்க் காணிக்கைகள்



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியும்,
புவியியற்றுறை பேராசிரியருமாகிய

**செ. பாலச்சந்திரன்**

அவர்கள் நேற்றுமுன்தினம் சிவபதமெய்தியதையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(93696)

## கண்ணீர் அஞ்சலி



எமது கலைப்பீடாதிபதி, பேராசிரியர்

**செ. பாலச்சந்திரன்**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கிறிஸ்தவ நாகரிகத் துறை,
யாழ்.பல்கலைக்கழகம். (93702) விரிவுரையாளர்கள்,மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக
கலைப்பீடாதிபதி, பேராசிரியர்

**செ. பாலச்சந்திரன்**

அவர்கள் சிவபதமடைந்தமையையிட்டு அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொருளியற்றுறை,
கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம். (93701)

தலைவர்,
விரிவுரையாளர்கள், மாணவர்கள்
மற்றும் துறைசார் ஊழியர்கள்.

## இதய அஞ்சலி



எமது புவியியற்றுறை பேராசிரியரும்
கலைப்பீடாதிபதியுமாகிய பேராசான்

**செ. பாலச்சந்திரன்**

அவர்களின் மறைவையொட்டி நாம் மிகுந்த கவலை அடைவதோடு, அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புவியியற் கழகம், புவியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
(93704)

# வடமராட்சியில் நாளை மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டம்!

## ஹர்த்தாலுக்கும் அழைப்பு

வடமராட்சி, ஒக். 22

கடலில் தொழில் செய்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடைகளை முற்றாக நீக்கி சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபட அனுமதிக்குமாறு கோரி வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நாளை வடமராட்சிப் பகுதியில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கோரிக்கைக்கு தகுந்த பதிலை வழங்குமாறு கேட்டுநாளை பருத்தித்துறை பஸ்நிலையப் பகுதியில் கடற்றொழிலாளர்கள் இணைந்து உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளனர்.

கடற்றொழிலாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நாளைய ஹர்த்தாலுக்கும், உண்ணாவிரதப் போராட்டத்துக்கும் ஆதரவு வழங்குமாறு வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பொது அமைப்புகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

பருத்தித்துறை இறங்குதுறை தொழிலாளர்களும் பார ஊர்தி சங்கமும் இப்போராட்டத்துக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளன.

வடமராட்சிப் பிரதேச கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர்கள் மூலம் சுட்டிக்காட்டி வந்த போதிலும் தமது பாதிப்புகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் —

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட மகஜருக்கும் இதுவரை பதில் கிடைக்கவில்லை எனவும்—

வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் தெரிவித்திருக்கிறது.

## குறைகேள் செயலமர்வு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ். கல்வி வலயத்தில் இன்று திங்கட்கிழமை முதல் குறைகேள் சேவை ஆரம்பமாக உள்ளது.

யாழ். கல்விக் கோட்டத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கும் —

நல்லூர் கோட்டத்தில் நாளை மறுதினம் புதன்கிழமையும் குறைகேள் சேவை இடம்பெறும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் க. குமாரசாமி அறிவித்துள்ளார்.

இந்தக் குறைகேள் செயலமர்வில் பங்குபற்ற விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பான ஆதாரங்களையும் எடுத்து வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று 21 பேரின் அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.22

யாழ் போதனா வைத்தியசாலையில் 1987 ஆம் ஆண்டு கடமை நேரத்தில் இந்தியப் படையினரால் கொல்லப்பட்ட ஊழியர்களின் 14 ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த டாக்டர்கள், தாதியர், சிற்றூழியர்கள் உட்பட 21 பேர் இந்திய அமைதிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே.

வைத்தியசாலைப் பணிப்பாளர் தலைமையில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு ஆரம்பமான நினைவு அஞ்சலி நிகழ்வின்போது இறந்த ஊழியர்களின் திருவுருவப்படங்களுக்கு மாலை அணிவித்து மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலியைத் தொடர்ந்து பணிப்பாளர் தலைமையில் அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

அஞ்சலிக் கூட்டத்தை அடுத்து ஆஸ்பத்திரி வளவில் அமைந்திருக்கும் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் ஆத்ம சாந்திப் பூசை இடம்பெற்றது. (15)

## காலஞ்சென்ற பேராசிரியரின் இறுதிச் சடங்குகள் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.22

நேற்று முன்தினம் காலமான யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி செ.பாலச்சந்திரனின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறவுள்ளன.

கந்தர்மடத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று காலை 9.00 மணி முதல் இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகும். இறுதிக்கிரியைகளின் பின்னர் அவரது உடல் காலை 10.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழகச் சமூகத்தினரின் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ. குமாரவடிவேல் தலைமையில் அங்கு அஞ்சலிக் கூட்டம் இடம்பெறும். அதன் பின்னர் பூதவுடல் அங்கிருந்து கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்படும்.

பேராசிரியரின் மறைவை அடுத்து யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் நேற்று முதல் துக்கம் அனுஷ்டித்து வருகின்றனர். பல்கலைக்கழக வளாகத்தில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன. சோக இசையும் ஒலிக்கப்பட்டு வருகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்டத்திலுள்ள கழகங்களின் 21 வயதுக்கு உட்பட்டோர் அணிகளுக்கு இடையில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் இன்று பிற்பகல் ஆரம்பமாகின்றன.

ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் தலா ஆறு அணிகள் இச்சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றுகின்றன.

இன்றைய ஆட்டத்தில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:-

✱ 4.00 மணி:- (பெண்கள் பிரிவு) குருநகர் யுத்காமல் வி.க. எதிர் ஜொலிஸ்ரார்ஸ் வி.க.

★ 4.45 மணி:- (ஆண்கள் பிரிவு) சென்றலைட்ஸ் வி.க. எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் வி.க.

(உ)

வலி. வடக்கு, ஒக் 22

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கோட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அரையிறுதி ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 8.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

### 18 வயதுப் பிரிவு

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம்வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் எதிர் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.

### 18 வயதுப் பிரிவு

மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. (க-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு-:

### 16 வயதுப் பிரிவு

கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் பெரியபுலம் ம.வி.

யாழ். புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி.

யாழ். இந்துக் கல்லூரி எதிர் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம். (க-86)

★ ★ ★

இளவாலைபுனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் தூய பரியோவான் கல்லூரிக்கும் இடையேயான சிநேகமான உதைபந்தாட்ட போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டங்கள் 16வயது. 18 வயது, 20 வயதுப் பிரிவினர் இடையே நடைபெறவுள்ளன. (க-86)

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின்ஆதரவில் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நவராத்திரி தின வழிபாடு சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி என். சிவராசா தலைமையில் நடைபெறும். ஊனமுற்ற நிலைய உறுப்பினர்களின் இயல், இசை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கூட்டு வழிபாடு நிகழ்வு நடைபெறும்.(க-152)

★ ★ ★

நவராத்திரி விழாவின் ஐந்தாம் நாளான இன்று இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு இசைஞானபூபதி ராதாகிருஷ்ணனின் மாணவிகளான தே. அஜாதா, சு. தர்மிகா, தி. அஜித்தா, பா. ஜெயகௌரி, பா. தர்சினி ஆகியோரது வயலின் இசை நிகழ்ச்சிஇடம்பெறும்.(ஒ-7-6)

## திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் வேட்பாளர்களைத் தெரிவதில் மு. காங்கிரஸுக்கு நெருக்கடி

அம்பாறை, ஒக். 22

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்துக்கான வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதில் முஸ்லிம் காங்கிரஸ் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதாகவும்—

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மேற்படி கட்சி சார்பாகப் போட்டியிட பல புதிய முகங்கள் விண்ணப்பித்திருப்பதே இந்த நெருக்கடி நிலைக்கும் காரணம் என்றும் — தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து முஸ்லிம் காங்கிரஸின் பிரமுகர் ஒருவர் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் :-

திகாமடுல்ல தேர்தல்மாவட்டத்தில் ஐக்கியதேசியக் கட்சியுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து போட்டியிடவேண்டிய ஓர் இணக்கப்பாடு ஏற்படின், குறைந்தது 3 மு.கா. உறுப்பினர்களை அந்த வேட்பாளர் பட்டியலில் சேர்த்துக் கொள்வது என்பதில் பலத்த சிக்கல்களை எமது கட்சி எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இதை விடுத்து முஸ்லிம் காங்கிரஸ் இம்மாவட்டத்தில் தனித்து மரம் சின்னத்தில் போட்டியிடவேண்டிய நிலை ஏற்பட்டால் 10 வேட்பாளர்களைச் சேர்த்துப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காண முடியும் என்று தெரிவித்துள்ளார். (க-7)

## ஜெனரல் ஆனந்த வீரசேகர ஐ.தே.கட்சியில் இணைந்தார்

### ஹமில்டனும் விரைவில் சேரக்கூடும்

கொழும்பு, ஒக். 22

ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர ஐ. தே. கட்சியில் சேர்ந்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவும் விரைவில் ஐ. தே. கட்சியில் இணைவார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வெள்ளிக்கிழமை ஐ.தே.க. துணைத்தலைவர் காமினி அத்துக்கோறளையிடம், மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர ஐ. தே. கவின்உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டார்.

தான் தேர்தலில் நிற்கப்போவதில்லையென்றும், ஆனால் ஐ. தே. கவினதும் அதன் அணியினதும் வெற்றிக்காக உழைக்கப் போவதாகவும் பின்னர் அவர் தெரிவித்தார்.

லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ படுகொலை விசாரணைகளின் போது தான் அவமதிக்கப்பட்டதாகவும், சித்திரவதைக் கூடம் நடத்தியதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)

## கொழும்பிலும் ஈ. பி. டி. பி. வேட்பாளர்களை நிறுத்தும்

### டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

பொதுத்தேர்தலில் ஈ. பி. டி. பி. கட்சி கொழும்பு மாவட்டத்திலும் வேட்பாளர்களை நிறுத்த உள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக கட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் மலையக மக்களின் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டவை. அத்துடன் மலையகத் தமிழ் அரசியல் கட்சிகள் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மலையக மாவட்டங்களில் போட்டியிடுவதிலிருந்து ஒதுங்கிக்கொள்கிறது.

கொழும்பு மாவட்டத்தில் எமது கட்சியின் சார்பில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும். கொழும்பு மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் மத்தியில் எமது கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து எடுத்து விளக்கும் சந்தர்ப்பமாகவும், ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு காண்பதையே தமிழ் பேசும் மக்கள் முழு மனதுடன் விரும்பி நிற்கிறார்கள் என்பதை எடுத்துணர்த்துவதற்காகவும் அங்கு எமது கட்சி போட்டியிடும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## திருமலையில் வேட்பாளரை காங்கிரஸ் நிறுத்தாது!

திருகோணமலை, ஒக் 22

நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிவடுதில்லை என்று அகில இலங்கைத் தமிழ்க் காரங்கிரஸ் கட்சி முடிவு செய்திருக்கிறது.

கட்சியின் திருகோணமலை மாவட்ட அரசியற் குழுவின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் மாலை பிரதான வீதியில் உள்ள மாவட்ட அமைப்பாளரின் இல்லத்தில் தலைவர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. பல்வேறு காரணங்களுக்காக திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடுவதில்லை என அவர்கள் தீர்மானித்துக் கொண்டனர். இந்தத் தீர்மானத்தை கட்சியின் தலைமைப் பீடத்துக்கு அறிவிப்பதாகவும் அவர்கள் முடிவெடுத்துக் கொண்டனர். (ஐ-145)

## முதியோர்தின விழா

சுன்னாகம், ஒக். 22

வலி. தெற்கு பிரதேச செயலகத்தின் முதியோர் தின விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் முப்பது முதியோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மூத்தபடைப்பாளியும்,ஒய்வு பெற்ற அதிபருமான 'சிற்பி' சிவசரவணபவன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (ஐ-27)

உதயன்

## சிங்களக் கட்சிகளின் பதில் என்ன?

நமது நாட்டின் இன்றைய அவல நிலைக்குக் காரணம் பல தசாப்தங்களாகத் தீர்க்கப்படாமல் இழுபடும் இனப்பிரச்சினையும் அதனால் வெடித்துள்ள கொடூர யுத்தமும்தான.

இந்தத் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுதான் நமது நாட்டின் அரசியல்வாதிகளுக்கு உள்ள முக்கிய பொறுப்பாகும்.

காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகளும் சரி, எதிர்க்கட்சியில் இருந்த அரசியல்வாதிகளும் சரி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் தமது முக்கிய பொறுப்பை நிறைவேற்றாமல் தமது பதவியைத் தக்கவைப்பதில் அல்லது பதவியை எட்டிப்பிடிப்பதில் மட்டுமே குறியாக இருக்கின்றார்கள்; அதற்குத் தேவையான திருகுதாளங்களை - தில்லுமுல்லுகளை - செய்வதில்தான் முனைப்பாக உள்ளனர்.

இதுதான் இனப்பிரச்சினை இவ்வளவு சீழ்பிடித்து நாடு இந்தப் பேரழிவு நிலையில் தள்ளாடுவதற்குப் பிரதான காரணம்.

இனப்பிரச்சினையாலும், அதனால் மூண்ட கொடூர யுத்தத்தாலும், அதன் விளைவாக ஏற்பட்டுள்ள பெரும் பொருளாதாரப் பின்னடைவுகளுக்கும் மத்தியில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை நாடு சந்திக்கின்றது.

இந்தத் தேர்தலிலும் கூட, நாட்டை அழிவுக்கு இட்டுச்செல்லும் தங்களின் வழமையான பாணியிலிருந்து அரசியல்வாதிகள் திருந்துவதாக - மாறுவதாக - தங்களை மாற்றிக்கொள்வதாக - தெரியவில்லை.

இந்த நிலையில்தான் -

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு தாங்கள் கைவசம் வைத்துள்ள திட்டம் என்னவென்பதைத் திட்டவட்டமாக வெளியிடும்படி பிரதான கட்சிகளைக் கோரியிருக்கின்றது தேசிய சமாதானப் பேரவை.

பிரதான கட்சிகளின் திட்டம் என்னவென்பதை அறியும் உரிமை ஒவ்வொரு வாக்காளருக்கும் உண்டு என்றும் அந்தப் பேரவை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

நோர்வே ஏற்பாட்டிலான சமாதான முயற்சிகள் தோல்விகண்ட பின்னர், இந்தப் பிரச்சினைக்குத் தான் முன்வைக்கப்போகும் தீர்வு என்னவென்பதை ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி தெளிவுபடுத்தவில்லை. மாறாக, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி விடுதலைப் புலிகளிடம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்று தங்களின் பொ.ஐ.மு. அரசைக் கவிழ்க்க நடவடிக்கை எடுத்தது என்று சேறு அள்ளி வீசும் பிரசாரத்தில் மும்முரமாக உள்ளது.

ஆனால், ஐ.தே.கட்சியோ, தான் ஆட்சிக்கு வந்ததும் தமிழர்களுக்கு அதிகளவில் அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் என்று மொட்டையாகக் கூறுகின்றதே தவிர, அமைதித் தீர்வுக்கான தனது திட்டம் இதுதான் என்று தெளிவுபடுத்துவதாக இல்லை.

இதேபோலவே, தன்னை மூன்றாவது சக்தி என்று அழைத்துக் கொள்ளும் ஜே.வி.பியும் வெறுமனே இனவாதக் கோஷம் எழுப்புகின்றதோடு நின்றுவிடுகின்றது. இனப்பிரச்சினைக்குத் தான் முன்வைக்கப்போகும் திட்டம் இதுதான் என்று தெளிவுபட அறிவிக்கும் அரசியல் நேர்மை அந்தத்தரப்பிடமும் இல்லை.

இவற்றையெல்லாம் கருத்தில் எடுத்துத்தான் சமாதானப் பேரவை தனது நீதிய கோரிக்கையை இப்போது முன்வைத்திருக்கின்றது.

"ஒருவருக்கு ஒருவர் மாறி மாறி குற்றஞ்சாட்டும் எதிர்ப் பிரசாரத்தில் ஈடுபடுவதைக் கைவிட்டு, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் தங்களின் யோசனைகளை இந்தக் கட்சிகள் முன்வைக்கவேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்'' - என்று, தேசிய ஜனநாயகப் பேரவை கோரியிருக்கின்றது.

மூன்று பிரதான சிங்களக் கட்சிகளும் உடனடியாகப் பதில் தர வேண்டிய விவகாரம் இது.

தங்கள் நிலைமையை இந்தக் கட்சிகள் தெளிவுபடுத்துமா?

தேசிய சமாதானப் பேரவை போன்று, தமிழ்க்கட்சிகளும் ஒன்று சேர்ந்து இதேமாதிரியான கோரிக்கையை சிங்களக் கட்சிகளிடம் முன்வைப்பது பொருத்தமானதாக இருக்கும்.

### இருபாலை, நீர்வேலி, புத்தூரில்

# நிறைகுறைந்த பாண் விற்ற வர்த்தகர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம்,ஒக்.22

இருபாலை, நீர்வேலி, புத்தூர்ப் பகுதிகளில் நிறைகுறைந்த பாணை விற்பனை செய்த மேலும் சில வர்த்தகர்கள் சிக்கியுள்ளனர்.

யாழ்.செயலகத்தின் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் மற்றும் நிறுவைகள் - அளவைகள் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய திடீர் பரிசோதனையின்போதே இந்த வர்த்தகர்கள் பிடிபட்டுள்ளனர்.

இத்தகைய நடவடிக்கைகள் யாழ் மாவட்டத்தில் ஏனைய பகுதிகளிலும் திடீர், திடீரென மேற்கொள்ளப்படும் என்றும் இதுவரை பரிசோதனைக் குழுவினால் கண்டுபிடிக்கப்பட்டவர்களுக்கு எதிராக விரைவில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் -

யாழ்.மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னரும் கோப்பாய், இருபாலைப் பகுதியில் திடீர் சோதனை இடம்பெற்றது தெரிந்ததே. (க-10-ரி)

# லங்கா சிமெந்து ஊழியர்களில் ஒரு தொகுதியினருக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம்,ஒக்.22

லங்கா சிமெந்து நிறுவனத்தைச் சேர்ந்த கிடப்பு நிலையிலுள்ள ஊழியர்களுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்த முதலாவது பிரிவினர்களுக்கு எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் இணுவிலில் இயங்கும் லங்கா சிமெந்து நிறுவன அலுவலகத்தில் வைத்து காசோலையாக கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் -

சம்பந்தப்பட்ட ஊழியர்கள் இந்த இரண்டு தினங்களிலும் தவறாது தமக்குரிய கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் -

அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-7)

## நாட்டு நடப்பு

### எந்த நாளோ?

கலை தவழ் கோபுரம் சூழ்
கவின் பெறு தமிழர் மண்ணில்
தலை விதி மாறிற் றென்று
தமிழர்கள் மகிழ்ந்து உவக்க
அலை யென அவர்கள் ஒன்றாய்க் கூடி
ஆர்ப்பரித்து மகிழ்ந்து பொங்க
தொலைந்தது கொடும் போரென்ன
தொல்லைகள் தீர்ந்த தென்று
நிலை குலைந்த தமிழர் எல்லாம்
நிம்மதிக் கடலில் மூழ்க
குலையொடு தெங்கு வாழை
கொண்டு வந்து பந்தல் போட
இல்லை இனி யுத்தமென்று
இயம்புநாள் எந்த நாளோ?

- *விகடகவி.*

### தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்க

# வட, கிழக்கு தமிழ்க்கட்சிகள் கொழும்பில் போட்டியிடுவதைத் தவிர்க்க வேண்டும்

## இ.தொ.கா. கோரிக்கை

கொழும்பு,ஒக்.22

தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கும் வகையில் வடக்கு - கிழக்கு தமிழ்க்கட்சிகள் கொழும்பில் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் ஆர்.யோகராஜன் வடக்கு - கிழக்கு தமிழ்க்கட்சித் தலைவர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர். இதேவேளை வடக்கு-கிழக்கைச் சேர்ந்த நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பும் கொழும்பில் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

இதனால் தமிழர்களது வாக்குகள் பிரிக்கப்பட்டு தமிழ்ப் பிரதிநிதித்துவம் பறிபோகும் நிலை உள்ளது என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

தற்போதைய அரசியல் கள நிலைவரம் குறித்து யோகராஜன் தெரிவித்திருப்பதாவது:-

வட-கிழக்கு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணப்படவேண்டியது அவசியம். அந்த நிலைப்பாட்டிலேயே எமது கட்சியுள்ளது. கொழும்பில் போட்டித் தவிர்ப்பு ஏற்பட்டால் வட-கிழக்கு மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ப நாம் செயற்படத் தயாராகவுள்ளோம். இத்தகைய உறுதிப்பாட்டின் அடிப்படையில் போட்டித் தவிர்ப்பை மேற்கொள்ள வட-கிழக்கு கட்சிகள் முன்வர வேண்டும்.

### 1976ஆம் ஆண்டு ஒப்பந்தம்

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இ.தொ.காவுக்கும் இடையில் 1976 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. அதன்படி வட-கிழக்கில் வாழும் இந்திய வம்சாவளி மக்களை கூட்டணி பிரதிநிதித்துவப்படுத்துவது என்றும் வட- கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழ்மக்களுக்கு இ.தொ.கா. பிரதிநிதித்துவப்படுத்துவது என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனடிப்படையில்தான் 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் எம்.எஸ். செல்லச்சாமி போட்டியிட்டபோது தேர்தல் பிரசார மேடையில் மறைந்த கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம், தற்போதைய தலைவர் சிவசிதம்பரம் ஆகியோர் தோன்றி ஆதரவளித்தனர். இதனைக் கருத்திற்கொண்டு போட்டித் தவிர்ப்பை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

அப்படியானால்தான் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றமுடியும் - என்று கூறியுள்ளார்.

இதற்கிடையில் -

இந்த விவகாரம் குறித்து ஆர் யோகராஜன் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் அவிநயகமூர்த்தி, தமிழர்விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் பேச்சு நடத்தியதாகவும்-

சம்பந்தப்பட்ட கட்சிகளின் தலைவர்கள் இன்று கூடி இது குறித்து ஆராய்வர் என்றும் - மற்றொரு தகவல் தெரிவித்தது.

(க-7)

# சீவல் தொழிலாளர்களுக்கு ஆயுள் காப்புறுதித் திட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

குடாநாட்டிலுள்ள சீவல் தொழிலாளர்களுக்கான ஆயுள் காப்புறுதித் திட்டம் ஒன்றை யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ஆரம்பிக்கவுள்ளது.

சீவல் தொழிலாளர்கள் எதிர் நோக்கி வரும் விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புகள். போன்றவற்றை ஈடு செய்யும் முகமாக ஆரம்பிக்கப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கு அந்தந்த பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விண்ணப்பிக்க முடியும் என்று பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் சீவல் தொழிலாளர்களும் அவர்களின் குடும்பத்தவர்களும் எதிர் காலத்தில் பல நன்மைகளைப் பெறுவார்கள் எனவும் -

இது தொடர்பான மேலதிக விவரங்களை பனை அபிவிருத்திச் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் பனை அபிவிருத்திச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நா.சந்திரமோகன் தெரிவித்துள்ளார்.

(க-4)

### நாளை

ஐப்பசி 06
செவ்வாய்க்கிழமை
திதி : ஸப்தமி
முன்னிரவு 10.33 வரை.
நட்சத்திரம் : பூராடம்
பிற்பகல் 3.48 வரை.
மரணயோகம் - கரிநாள்
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 3.02 - 4.32
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தனிமனிதனுக்காக உயிர் கொடுப்பவனை விட இலட்சியத்துக்காக உயிர் கொடுப்பவனே தியாகி.

### சர்வஜன வாக்கெடுப்பு விண்ணப்பங்கள் மூலம்

# பொதுத்தேர்தல் கடமைக்கு அரச ஊழியர்கள் தெரிவு

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் கடமையில் ஈடுபடுத்தப்பட, உத்தியோகத்தர்கள் சர்வஜன வாக்கெடுப்புக்கென வழங்கப்பட்ட விண்ணப்ப விவரங்களில் இருந்து தெரிவு செய்யப்படுவர் என யாழ்.அரச அதிபரும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான க.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இது குறித்த சுற்றறிக்கை ஒன்றையும் அவர் யாழ்.மாவட்டத்தில் சகல அரச திணைக்களங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

அந்தச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சர்வஜன வாக்கெடுப்புக்காக கடமையில் ஈடுபடுத்தப்படவிருந்த உத்தியோகத்தர்களின் பெயர் விவரங்களை அனுப்பிவைத்த பின்னர், சேவையில் இருந்து ஓய்வுபெற்ற, இடமாற்றம்பெற்ற, புதிதாக நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் இருப்பின் அவர்கள் தொடர்பான விவரங்களை திணைக்களத் தலைவர்கள் உடனடியாக யாழ். தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பிவைக்க வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-7-51-152)


### கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



*சேற்றில் புதைந்த ஷெல்லை சேர்ந்த கத்தித் தடியினால்*
*எட்ட நின்று இழுத்தாலும் எனாகும் அது உனக்கு*
*வீணான படுதுயரம் வேண்டாம் உனக்கு எந்நாளும்*
*அதனருகே அடையாளம் வைத்து அயலாரை எச்சரித்தல் நன்று.*

## குழந்தை இயேசுவுக்கு நன்றி!

என்னை நீ அதிகமதிகமாக மகிமைப்படுத்தும் போதெல்லாம் உனக்கு நான் அதிகமான ஆசிகளை அளிப்பேன் என மொழிந்த இயேசுவே! என் தேவைகளில் உதவிபுரிந்த உம் கருணைக்கு என் நன்றிகள்!!

- குழந்தை இயேசுவின் அடியாள்.

(93328)



## நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

யா/இணுவில் இந்துக் கல்லூரி

2001 - தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்

K.சோபிகா - 148 புள்ளிகள்
S.சஞ்சீவன் - 142 புள்ளிகள்
K.வீணாவாகினி - 138 புள்ளிகள்
T.வேணுகானன் - 128 புள்ளிகள்

சித்தியெய்திய மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும் நன்றி கூறி மனமார வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்.

(93647)



வலி. தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## மாபெரும் விளையாட்டுப்போட்டி ~ 2001

### பரிசளிப்பு விழா

இடம்:- மானிப்பாய் ரவீந்திரன் கலாசார மண்டபம்
நேரம்:- பி. ப. 2. 00 மணி (புதியநேரம்)
காலம்:- நாளை (23. 10. 2001) செவ்வாய்க்கிழமை
தலைமை:- வெலிச்சோர் அன்ரன் லோன்சன ஜே. பி. யூ. எம்.
(தலைவர், வலி. தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்)

பிரதமவிருந்தினர்:
உயர்திரு.ரி.வி.கிருஷ்ணசாமி
(யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)

கௌரவ விருந்தினர்:
☆ உயர்திரு.என்.திரிலோகநாதன் ஜே.பி.யூ.எம்.
(தலைவர், வலி. மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்)
☆ உயர்திரு.நா.வேதநாயகன்
(பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)
☆ உயர்திரு.இ. வசந்தசேனன்
(சட்டத்தரணி, மானிப்பாய்)
☆ உயர்திரு. ந. விவேகானந்தராசா
(செயலாளர், இந்து மகாசபை, மானிப்பாய்)

☆ நிகழ்ச்சிநிரல் ☆

மங்கள விளக்கேற்றல்
தமிழ்த்தாய் வாழ்த்து
வரவேற்புரை:- திரு. பிரான்சிஸ் விக்டர்
(செயலாளர், வலி. தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்)
ஆசியுரை :- அருட்திரு.எ.எவ்.பெனற்
(பங்குத் தந்தை, மானிப்பாய்ப் பங்கு)
பரிசில் வழங்கல:-
விளையாட்டுத் தொகுப்புரை:- திரு. எம்.ஆர்.மோகனதாஸ்
(விளையாட்டு அலுவலர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)

பி.ராஜன் மாஸ்ரர் குழுவின் (கொக்குவில்)
மாபெரும் கராட்டிக் கண்காட்சி

நன்றியுரை:- திரு.செல்வராஜா ரமேஷ் ஜே.பி.
(விளையாட்டு இணைப்பாளர், உள்ளூராட்சி உதவியாளர் - வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்)

குறிப்பு:- பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களின் வீரர், வீராங்கனைகள் குறித்த நேரத்தில் சமுகம் தரவும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை.

வலி.தென்மேற்கு
பிரதேச சபை,
மானிப்பாய். (C/18785)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



27 - 04 - 1929
03 - 10 - 2000

அமரர் பரமேஸ்வரி இராஜரத்தினம்

திதி: 22.10.2001

"இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார் பெருமை பிறங்கிற்று உலகு"

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

130, கண்டி வீதி,சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (93619) - குடும்பத்தினர்.


## வருடாந்தக் கூட்டம்

மானிப்பாய்,ஒக்.22

மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல் விவகார சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு மானிப்பாய் - யாழ்.வீதியிலுள்ள 'திருத்தணிகை'யில் இடம் பெறும்.

சட்டத்தரணி இரா.வசந்தசேனன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.கணேஷராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (க-90)

## நூல் வெளியீடு

கொழும்பு,ஒக்.22

நூலாசிரியர் இ.சிறிஸ்கந்தராசா எழுதிய "நகைச்சுவைக் கதம்பம்" என்னும் நூலின் வெளியீட்டுவிழா எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு வெள்ளவத்தை தமிழ்ச் சங்க மண்டபத்தில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையை இலங்கை வானொலி அறிவிப்பாளர் இளைய தம்பி தயானந்தாவும், சிறப்புரையை சக்தி எவ்.எம்.வானொலி நிகழ்ச்சிப் பணிப்பாளர் எஸ்.எழில்வேந்தனும், மதிப்புரையை சூரியன் எவ்.எம். வானொலி நிகழ்ச்சிப் பொறுப்பதிகாரி ஆர்.பி.அபர்ணாசுதனும் நிகழ்த்துவர். (க-7)

## காக்கைதீவுக் கடலில் இடிதாங்கி அமைக்க நடவடிக்கை

நவாலி,ஒக்.22

காக்கைதீவுக் கடலில் இடிதாங்கி ஒன்றை அமைப்பதற்கு சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் முன்வந்துள்ளது.

இக் கடலில் அண்மையில் 3 மீனவர்கள் தொழில் செய்துகொண்டிருந்த வேளை இடி மின்னல் தாக்கி உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-100)

## கசிப்புக் கொட்டில் பிடுங்கி அழிப்பு

குருநகர்,ஒக்.22

குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதியில் நீண்ட காலமாக கசிப்பு விற்பனை செய்தவரின் கொட்டில் இப் பகுதியில் உள்ள இளைஞர்களினால் கடந்த சனிக்கிழமை பிடுங்கி அகற்றப்பட்டதுடன், கசிப்பு விற்பனையும் தடைசெய்யப்பட்டுள்ளது.(க-51)

## பாலியல் நோய் பரிசோதனைகள் ஆரம்பம்

யாழ்.போதனா வைத்தியசாலை பாலியல் நோய்த்தடுப்புப் பிரிவில் இந்நோய் தொடர்பான பரிசோதனைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாலியல் நோய் குறித்து கண்டறிவதற்காக மேற்கொள்ளப்படும் இரத்தச் சோதனையைச் செய்வதற்கு பாவிக்கப்படும் மருந்து ஆய்வுகூடத்தில் முடிந்ததால் கடந்த ஒரு மாத காலமாக இந்த ஆய்வுப் பணி தடைபட்டிருந்தது.

இதனால் நோயாளர்கள் மாத்திரமன்றி நிரந்தர நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்களும் வைத்திய பரிசோதனைக்காக காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

இம்மருந்து வந்து சேர்ந்துள்ளதை அடுத்து பரிசோதனைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.(க-15)

## 20 வருடங்களாக திருத்தப்படாத வீதிகள்

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உள்ள வைத்தியசாலை வீதி, சிவபூதராயர் கோயிலுக்குச் செல்லும் வீதி, மூன்றாம் சந்தி வீதி மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருந்த போதும் சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை திருத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று இப்பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் இந்த வீதிகள் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளன. (க-133)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

22.10.2001

HAPPY BIRTHDAY



நெல்லியடியைச் சேர்ந்த
மனோகரன் - அம்பிகாதேவி தம்பதியினரின்
தவப்புதல்வன்

செல்வன் அகிலன்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (22.10.2001) திங்கட்கிழமை நெல்லியடியிலுள்ள தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், பெரியமாமா, பெரியமாமி, மைத்துனி (கொழும்பு), ஆசைமாமா, ஆசைமாமி (கனடா), குஞ்சு மாமா, குஞ்சுமாமி (கனடா), குட்டிமாமா, குட்டிமாமி (கனடா), சித்தப்பா (கனடா), சின்னமாமா, சின்னமாமி (ஜேர்மனி), சித்தப்பா (ஜேர்மனி), மாமா, மாமி (லண்டன்), மாமாமார் (லண்டன்), மாமி (இந்தியா) மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் நெல்லியடி காளி அம்மன் துணைகொண்டு பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

முகவரி:
காளிகோயிலடி,
நெல்லியடி,
கரவெட்டி. (93662)

தகவல்:
ம.மனோகரன் (அப்பா)



## 31ஆவது நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 17 - 06 - 1950



ஆண்டவன் அடியில் 22 - 09 - 2001

அமரர் கந்தசாமி கணேசலிங்கம்
(வாஸ் ஐயா)

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே!!
உங்கள் பிரிவு எம் நெஞ்சை வாட்டி வதைக்கின்றதே!
ஆத்மா சாந்தி அடைக!
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

"நேசன் உணவகம்",
டச்சு றோட்,
உடுவில். (93660)

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.



## யாழ்.குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

"சீட்கோ"

### உள்ளூர் மரக்கறி விதை விநியோகம்

யாழ். குடா நாட்டு விவசாயிகளின் நன்மை கருதி எமது சங்கத்தினால் முதன்முறையாக உற்பத்தி செய்யப்பட்ட உள்ளூர் மரக்கறி வகைகளின் தரமான விதைகளை இன்று (22. 10. 2001) திங்கட்கிழமை முதலாக குடா நாட்டில் உள்ள சகல கமநல கேந்திர நிலையங்களிலும், பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள கொவிசெவன நிலையத்திலும் மாத்திரம் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். சிறந்த முறையில் பொதி செய்யப்பட்ட பொதிகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பயிர் | இனம் | பொதியின் நிறை (கிராம்) | பொதியின் விலை |
|---|---|---|---|
| 1. தக்காளி | கே. சி. 1 | 10 | 50.00 |
| 2. கத்தரி | யாழ் ஊதா | 10 | 15.00 |
| 3. மிளகாய் | எம். ஐ. 2 | 250 | 250.00 |
| மிளகாய் | எம். ஐ. 2 | 100 | 100.00 |
| 4. வெண்டி | உள்ளூர் வெள்ளை | 10 | 10.00 |
| வெண்டி | உள்ளூர் வெள்ளை | 50 | 40.00 |
| 5. பயற்றை | கவரி | 10 | 10.00 |
| பயற்றை | கவரி | 50 | 40.00 |
| 6. பாகல் | திருநெல்வேலி வெள்ளை | 10 | 15.00 |
| 7. புடோல் | திருநெல்வேலி நீளம் | 10 | 15.00 |
| 8. சோளம் | றுவான் | 500 | 15.00 |

(C/18776) பொது முகாமையாளர்.

# சிவ, சக்தி அற்புதங்களை இலகு நடையில் தரும் சமய நூல்

சிவமும், சக்தியும் இணைந்த தனமையே இந்த உலகின் செயற்பாடுகள் அனைத்துக்கும் மூலகாரணம். இதனையே எமது சமய இலக்கியங்களும் எடுத்துக் கூறுகின்றன.

எனினும் இத்தகைய தத்துவத்தை உண்மையை - எடுத்துக் கூறுவதில் ஏனைய சமயங்களைவிட "சக்தி, சிவனின் அருளாட்சி" என்ற நூல் புதியதோர் அணுகுமுறையை பின்பற்றி கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பியின் நயம்பட உரைக்கும் திறமைக்குச் சான்றுகளாகும்.

இவ்வாறு இறை இன்பத்தை - தமிழுணர்வை - இறைவிசுவாசத்தை எடுத்துக் கூறுவதில் கைதேர்ந்தவரான நூலாசிரியர் ஆ.கதிர்காமத்தம்பி நூற்படைப்பிலும் ஒழுங்கு முறை ஒன்றைப் பின்பற்றியிருக்கிறார். அதாவது காப்பு, துதி, அவையடக்கம் ஆகியவற்றுக்கான செய்யுட்களும், அவற்றுக்குப் பின்னால் உள்ள பாடல்கள் நான்கு பெரும் பகுதிகளாகவும் பிரித்து அமைக்கப்பட்டுள்ளன.




**நூல்:- சக்தி சிவனின் அருளாட்சி**
**ஆசிரியர்:- கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பி**
**பக்கங்கள்:- 60**
**இலவசப் பிரசுரம்**

யிருக்கின்றதென்றே கூறவேண்டும்.

"பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தினுள்ளார்" என்னும் மணிவாசகரின் வாக்குக்கு அமைய நூற்பொருளோடு இந்த நூல் வெளிவந்துள்ளது.

தென்னிந்தியத் திருத்தலங்கள் பலவற்றுக்கும் தலயாத்திரை செய்ததன் பலனாகத் தான் கண்டு கேட்டு அறிந்து கொண்ட விடயங்கள் அனைத்தையும் நூலாசிரியர் இந்த நூல்மூலம் எமக்கு எடுத்துக்கூற விளைந்துள்ளார்.

இறைவன் புகழைப் பாடுவதற்கேற்றவாறு எதுகை மோனையுடன் கூடிய கவிதை நடையில் இந்த நூலில் உள்ள பாடல்கள் அமைந்துள்ளன. அத்துடன் நூலாசிரியரே அப்பாடல்களின் பொருளை அனைவரும் அறிந்து நயந்திடக் கூடிய வகையில் உரையையும் கூடவே தந்துள்ளார்.

தென்னாட்டின் திருப்பெருந்துறைத் தலம் பற்றி இவர் பாடிய -

*"மருவியவாதவூரன் மனங்கொள்ளும்*
*வகையினிலே*
*அருளுரை வழங்கியதால் அருட்கோலம்*
*பூணவைத்த*
*பெருந்துறை வீற்றிருக்கும்*
*பேரருளின் குன்றமன்னனான்*
*திருவடி சென்னி சேர்க்கத் தீவினைகள்*
*விலகிடுமே"*

- என்ற பாடலும், ஈழத்து திருக்கேதீஸ்வரம் மீது அதன் புகழ் குறித்து பாடிய

*"கேதென்பான் வழிபடவே*
*வேண்டியதைக்கொடுத்த பிரான்*
*சாதுக்கள் வணங்கிடவும் சம்பந்தன்*
*பாடிடவும்*
*வாதுபுரி சுந்தரன் தான் வண்டமிழை*
*ஓதிடவும்*
*ஆதுவலர் மகிழ்ந்திடவும்*
*அருள்வாரி சொரி வாரே"*

- என்ற பாடலும் நூலாசிரியர் கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பியின்...

சக்தி சிவனின் நவபேத ஆட்சிச் சருக்கம் என்பது முதலாவது பகுதியாகும். இறைவனுடைய படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் இந்தப் பகுதியில் மிகவும் சிறப்பான முறையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

ஒரு கமக்காரனுடைய செயற்பாடுகளை உவமைகளாகக் காட்டி இறைவனுடைய முத்தொழில்களையும் உணர்த்தும் வகையில் அமைந்த -

*"பண்பார் உழவன் பயிரினை*
*நாட்டியே*
*நன்னீர் உரமும் நன்முறை*
*பாய்ச்சலால்*
*நண்ணும் முதிர்வில் நயம்பெற*
*அறுப்பரே*
*அண்ணல் ஆற்றும் முத்தொழில்*
*அன்னவே"*

- என்ற பாடல் ஆ.கதிர்காமத்தம்பியின் கவித்திறனுக்கு உதாரணமாகும்.

## ஆனந்தன்

சக்தி சிவனின் அருள் மூர்த்தங்களின் சுருக்கம் என்பது இரண்டாவது பகுதியாகும். இந்தப் பகுதியில் தட்சணாமூர்த்தி, அர்த்தநாதீசுவரமூர்த்தி, கல்யாணசுந்தரமூர்த்தி, சோமஸ்கந்தமூர்த்தி, இலிங்கோற்பவமூர்த்தி, பிஷாடணமூர்த்தி, உமாமகேஸ்வரமூர்த்தி, நடராஜமூர்த்தி ஆகிய மூர்த்திகளின் ( சிவம் சக்தி ஒன்றிணைந்தவை) பெருமை கூறப்பட்டுள்ளது.

சக்தி சிவனின் அருளாட்சிச் சருக்கம் - இந்தியாவில் என்பது மூன்றாவது பகுதியாகும். இந்தப் பகுதியில் காசி, திருக்காளத்தி, திருத்தில்லை, திரு ஆலவாய், திருத்தோணிபுரம், திருவீரட்டானம், திருமறைக்காடு முதலிய 13 திருத்தலங்களின் (புண்ணியத்தலங்கள்) பெருமையும், அந்தத் தலங்களில் சக்தி சிவன் அருளாட்சி மூலம் மேற்கொள்ளப்பட்ட அற்புதங்களும் (அருட்செயல்கள்) விரிவாகக் கூறப்பட்டுள்ளன. வளரும் இளம் சமூகத்தினர் இறைவனது அற்புதங்களை அறிந்து கொள்ளவும், சமயவாழ்வில் தம்மை உட்படுத்தி வாழவும் இந்தப் பகுதி பேருதவியாக அமைந்துள்ளது.

நான்காவது பகுதி சக்தி சிவனின் அருளாட்சிச்சருக்கம் - ஈழத்தில் என்பதாகும். இந்தப் பகுதியில் வரலாற்றுப்புகழ்மிக்க திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், வண்ணை வைத்தீஸ்வரம், நகுலேஸ்வரம், வல்வை வைத்தீஸ்வரம், கொழும்பு பொன்னம்பல வாணேஸ்வரம், ஈழத்துச்சிதம்பரம் முதலிய 11 திருத்தலங்களின் பெருமை பலவாறு விரித்துக்கூறப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயங்கள் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ளவேண்டுமென விரும்பும் ஆர்வலர்களுக்கு இந்த நூல் பெரும் உசாத்துணையாக அமையும் எனில் மிகையில்லை.

## நூல்வீச்சு

இறுதியில் சில திருப்பதிகங்களும், கூட்டுப்பிரார்த்தனை மலர்களும் அநுபந்தங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

அநுபந்தங்களின் இணைப்புப் பற்றிக் கூறியுள்ள நூலாசிரியர், அது குறித்து பின்வரும் விளக்கத்தையும் குறிப்பிட்டுள்ளார். அது வருமாறு:-

"நாம் சென்னையில் நிகழும் நிகழ்ச்சிகளை வானொலிப் பெட்டியில் கேட்கவேண்டுமாயின் மத்திய அலைவரிசையில் அதற்குரிய மீற்றரைத் தொடர்பு கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் சென்னை வானொலி நிலையத்தில் நிகழும் நிகழ்சிகளை, நாம் கேட்க முடியும். ஏனைய மீற்றர்களைத் தொடர்பு கொள்வதனால் அந்நிகழ்ச்சிகளைக் கேட்க முடியாது. அதுபோலவே சிவனது திருவருளை ஈர்க்க வேண்டுமாயின் சிவபெருமானுடைய திருநாமங்களை - மந்திரங்களை - புகழை மீண்டும் மீண்டும் ஒலிக்கச் செய்தலே சாலச் சிறந்ததாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

எனவே " சக்தி சிவனின் அருளாட்சி" என்ற நூலைப் படிப்பதும், அதன்படி நடப்பதும் எமது தலையாய கடமை என்பதை உணர்வோம். நூலாசிரியருக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுப்பதும் எமது கடனே. ☆

# வவுனியாவில் துண்டுப் பிரசுரம்

வவுனியாவில் 'பண்டார வன்னியன் படை' என்ற பெயரில் நேற்று முன்தினம் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

'பதவிகளுக்காக முண்டியடிக்கும் வேட்பாளர்களே தமிழ் இனத்தின் சுய நிர்ணயம் பற்றிச் சிறிது சிந்தியுங்கள். கடந்த தேர்தலில் ஏற்படுத்தியது போன்ற வரலாற்றுத் தவறுகளை இனியும் ஏற்படுத்தாதீர்கள். எம் இனத்தின் விடுதலைக்காக ஐக்கியத்தை உடைக்காதீர்கள். ஏந்த அமைப்பாவது ஐக்கியத்தை குழப்ப முயன்றால் அதன்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய பெரும்பான்மைக் கட்சிகளுடன் கைகோர்த்துக் கொள்ளவேண்டாம்' -

என்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ம-164)

## கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் வணிகமன்றத்தால் வெளியிடப்பட்ட 'வணிக ஒளி' சஞ்சிகை வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராஜன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். கல்லூரியின் அதிபர் நா.வன்னியசிங்கமும் அருகில் காணப்படுகின்றார். (ஐ)



உடுவில் இந்துஇளைஞர் மன்ற பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரன் கொடியை ஏற்ற, போட்டியை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (ஐ-152)



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் அண்மையில் முத்தமிழ் விழா நடைபெற்றது. பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் அ.சண்முகதாஸ் மங்கள வாத்தியங்களுடன் விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்ட காட்சி. (ஐ-133)



கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள தென்னிந்தியத் திருச்சபையின் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட வைத்திய கலாநிதி ஆர். எஸ்.ஜெயக்குமார் உரையாற்றுவதையும் - பிரதமவிருந்தினர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் உட்படபலர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ)

# ஆங்கில மூலவள நிலையம் வடமராட்சியில் அங்குரார்ப்பணம்

பருத்தித்துறை,ஒக்.22

வடமராட்சி கல்வி வலயத்தில் ஆங்கில மூலவளப் பயிற்சி மையம ஒன்று அண்மையில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய சி.சிவராசாவினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. -

இந்நிகழ்வுக்கு ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரமூர்த்தி தலைமை வகித்தார்.

இந்த மையத்தை அமைப்பதற்கான நிதியை நெல்லியடியைச் சேர்ந்த தொழிலதிபர் ந.பாஸ்கரன் அன்பளிப்புச் செய்துள்ளார்.

வடமராட்சிப் பாடசாலைகளின் ஆசிரியர், மாணவர்களுக்கு ஒரு மூலவள ஆதார மையமாக இது செயற்படவுள்ளது. கற்றல், கற்பித்தல் தேவைகளுக்கு அடிப்படையான கட்புல, செவிப்புல சாதன வசதிகள் இங்கு ஏற்படுத்தப்படவுள்ளன.(ஐ-118)

# மாநகரப் பகுதியில் நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ்.மாநகரசபைப் பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

இதன் முதற்கட்டமாக வண்ணார்பண்ணைப் பகுதியில் உள்ள ஆறு இடங்கள் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தடுப்பூசி ஏற்றப்படும் இடங்கள் வருமாறு:-

இன்று திங்கள் காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை வள்ளுவன் சனசமூக நிலையம் -

பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை கமாட்சி சனசமூக நிலையம் -

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரையும் ஜே/97 கிராம அலுவலர் காரியாலயம் -

பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரையும் நீராவியடி சனசமூக நிலையம் -

புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரையும் வேம்படி சனசமூக நிலையம் -

பிற்பகல் 2.00மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரையும் ஆத்திசூடி சனசமூக நிலையம்.

(ஐ-10)

## எட்டு மாதங்களில் மட்டும்

# மருந்துத் தட்டுப்பாட்டால் வன்னியில் 33 சிசுக்கள் இறப்பு!

வவுனியா,ஒக்.22

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் நிலவிவரும் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக கடந்த எட்டு மாதங்களில் அங்கு 33 சிசுக்கள் இறந்துள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

12 சிசுக்கள் பிறந்த பின்னர் இறந்தன என்றும், 21 சிசுக்கள் இறந்து பிறந்தன என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை -

கடந்த 8 மாதங்களில் 254 சிசுக்கள் நிறைகுறைந்து பிறந்தன என்றும் -

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போதிய சத்துணவுகள் வழங்கப்படாமையே இதற்கு முக்கியகாரணம் என்றும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.(க-7)

# முக்கிய அறிவித்தல்

**கூட்டுறவுச் சங்கங்களின் சட்ட விதி 18(1) இன் கீழ் தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் (கொடிகாமம்) விசேட கிளைப் பொதுச் சபை கூட்ட அறிவித்தல் - 28.10.2001**

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களால் கூட்டுறவுச் சங்க சட்டவிதி 18(1) இன் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி திரு. தம்பையா செல்வசோதி, கூட்டுறவுச் சங்கப் பரிசோதகராகிய என்னால் மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளில் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான விசேட பொதுச்சபைக் கூட்டம் ஒன்று அழைக்கப்படுகின்றது. தவிசாளராகிய எனது தலைமையில் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

*இடம்:-* தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க பிரதம சங்கக் காரியாலயம், கொடிகாமம்.

*காலம்:-* 2001-10-28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

*நேரம்:-*
1. கிளை இல - 04 அல்லாரை முற்பகல் 10.00மணி.
2. கிளை இல - 12 மிருசுவில் முற்பகல் 11.00மணி.
3. கிளை இல - 13 விடத்தற்பளை நண்பகல் 12.00மணி.

*நிகழ்ச்சி நிரல் :-* ☆ தவிசாளர் உரை
☆ கிளைக்குழு உறுப்பினர் தெரிவு

**மேற்படி சங்கத்தின் வாக்களிக்கத் தகைமை பெற்ற உறுப்பினர்கள் யாவரும் தவறாது சமுகமளிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.**

*குறிப்பு :- மேற்படி கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான ஒழுங்குகள் 2001-10-14இல் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்தன. போதிய நிறைவெண் இன்மையினால் இக் கிளைகளுக்கான கிளை உறுப்பினர் தெரிவு இடம்பெறவில்லை. எனவே இவ்விசேட கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.*

கூட்டுறவு அலுவலகம்,
இல.857, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
20-10-2001

த.செல்வசோதி,
கூ.ச.பரிசோதகர்.

(C/18798)

## அஞ்சலி செய்கின்றோம்



அன்பினால் எமையாண்ட
கலைப்பீட தலைமகனே!
உங்களைப் பிரியும்
கொடுமை ஏன் வந்தது...?
சேர்,
உங்கள் நெஞ்சக் கனவுகளைக் காக்கும்
உறுதியுடன் அஞ்சலி செய்கின்றோம்!

(93679) - சமூகவியல் சமூகம், யாழ்.பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி
பேராசிரியர்



## செல்லத்துரை பாலச்சந்திரன்

அவர்கள் அமரத்துவமடைந்த துயர்நிலை குறித்த

# கண்ணீர் அஞ்சலி!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது உத்தமமான ஓர் உறுப்பினரை இழந்துவிட்ட துயரச் செய்தியை, மீளாத் துயில் அடைந்துவிட்ட பிரிவுத்துயரைத் தனது சங்க உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்கின்றது. பொறுமையும், மனிதநேயமும், ஜீவகாருண்யமும், நட்போடு பழகுந்திறனும் ஒருங்கே கைவரப்பெற்ற பேராசிரியர் செல்லத்துரை பாலச்சந்திரன் அவர்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இழந்துவிட்டது. அன்னாரது பிரிவுத்துயரினால் சொல்லொணா வேதனையில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவி, குடும்ப அங்கத்தினர்கள், உறவினர்கள், புவியியற்றுறை மாணவர்கள், புவியியற்றுறை கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்க அங்கத்தினர்களுடன் நாமும் எமது ஆழ்ந்த மனத் துயரைப் பகிர்ந்துகொள்கின்றோம்.

*அமரரின் ஆத்மா சாந்திநிலை பெறவேண்டி*
*பல்கலை வளவில் அருள்பாலிக்கும்*
*பார்வதி சமேத பரமேஸ்வரனின் திருத்தாள் பணிந்து நிற்கும்:*

க.தேவராஜா
*தலைவர்*

செ.கிருஷ்ணராஜா
*செயலாளர்*

(C/18799)

**யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.**

## பனை ஓலை ஏடு இலவச விநியோகம்

விஜயதசமியன்று மாணவர் ஏடு தொடக்குவதற்காகப் பாரம்பரிய பனை ஓலை ஏடுகளை அண்ணா தொழிலகம் வழமைபோன்று இலவசமாக விநியோகம் செய்யவுள்ளது.

இணுவிலில் உள்ள அண்ணா தொழிலகத்தில் இந்தப் பனை ஓலை ஏடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பாடசாலை அதிபர்கள் மற்றும் நிறுவனங்கள் உரிய ஆதாரத்துடன் தொடர்புகொண்டு ஏடுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பல்கலை. மாணவருக்கு அழைப்பு!

மறைந்த கலைப்பீடாதிபதி செ.பாலச்சந்திரனின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும்முகமாக அனைத்துப் பீடங்களையும் சார்ந்த மாணவர்கள் அனைவரையும் இன்று காலை 8.30 மணிக்குக் கைலாசபதி கலையரங்கில் ஒன்றுகூடுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்புவிடுத்துள்ளது. (க)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இலவச சிகிச்சை

வறுமைநிலையில் உள்ள நோயாளர்களுக்கு இலவசமாக மருத்துவ சிகிச்சையளிக்கும் திட்டம் ஒன்றைத் தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமப் பேரவை ஆரம்பிக்கவுள்ளது.

பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெறவுள்ள இந்த மருத்துவ முகாமில் வைத்திய நிபுணர்கள் கலந்துகொண்டு சிகிச்சை அளிப்பர் என ஆச்சிரமப் பொறுப்பாளர் கே. மோகனதாஸ் அறிவித்துள்ளார்.

வறுமைநிலையில் உள்ள நோயாளர்கள் இந்த முகாமில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார். (க-7)

## மானிப்பாயில் பரிசளிப்பு விழா

வலி.தென்மேற்கு பிரதேச சபை அண்மையில் நடத்திய விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்துகொள்வார். கௌரவ விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன், சட்டத்தரணி இ.வசந்தசேனன், வலி.தென்மேற்கு இந்து மகா சபையின் செயலாளர் ந.விவேகானந்தராசா ஆகியோர் கலந்துகொள்வர்.

கராட்டிக் கண்காட்சி உட்பட பல நிகழ்வுகள் இவ்விழாவில் இடம்பெறவுள்ளன. (க-135)

## வேஷங்கள் அறியாத வாழ்வே..!

*யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ.பாலச்சந்திரன் அவர்களின் இறுதிப் பிரியாவிடை இன்று நிகழ்வதனை ஒட்டி இந்தக் கவிதை.*

**புள்ளிகள் ஏதுமில்லா**
**வெள்ளை மனம் எங்கே...**
**பால சந்திரனாம்**
**பிள்ளை முகம் எங்கே...**

**கால நிலை அறிவு சொன்ன**
**கலைப்பீட தலைமகனே,**
**காலத்தில் உனைத் தோற்ற**
**கொடுமையென்ன...**

**நெஞ்சு நிறைந்த**
**நாளையின் கனவுகளோடு**
**நிமிர்ந்த நின்தேகம்**
**கண்ணுக்கு முன்னாலே**
**கரைந்த தென்ன...**

**யார்க்கும் வருகின்ற**
**விதிதானே என்று**
**ஆறமுடியவில்லை!**

**வேஷங்கள் அறியாத வாழ்வே**
**உங்கள்**
**விழுதுகள் கிடந்து அழுகின்றோம்**
**எங்கள்**
**கால கணக்கு முடியும் வரையில்**
**உங்கள்**
**வாழ்வின் நலன்களைக் காத்திருப்போம்**

**சென்று வருக - சாந்தியுடன்**
**எங்களுக்கும் சாந்தி தருக!**

*கலாநிதி*
என்.சண்முகலிங்கன்

# யா/யூனியன் கல்லூரி
## பரிசுத் தினமும் மலர் வெளியீடும் - 2001

**கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் நாளை *(2001.10.23) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு* கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நிகழவிருப்பதால், தங்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.**

*தலைவர்:-* திரு.சு.புண்ணியசீலன் அவர்கள் *(அதிபர்)*

*பிரதம அதிதி:-* பேராசிரியா இ.குமாரவடிவேல் அவர்கள் *(விஞ்ஞான பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)*

*ஆசி வழங்குபவர்:-* துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

*சிறப்பு விருந்தினர் :-* திருமதி றெஜீனா இருதயநாதன் அவர்கள் *(பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலிகாமம் கல்வி வலயம்)*
திரு.கா.சந்திரபாலன் அவர்கள் *(உ.க.ப.தெல்லிப்பழைக் கோட்டம்)*

*பரிசில் வழங்குபவர் :-* திருமதி இராஜினி குமாரவடிவேல் அவர்கள்

*யா/யூனியன் கல்லூரி,*
*தெல்லிப்பழை.*

(93680) *- கல்லூரிச் சமூகம்.*

# முக்கிய அறிவித்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் சட்ட விதி 18 (1) இன் கீழ்
தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் (கொடிகாமம்)

**விசேட கிளைப் பொதுச்சபை கூட்ட அறிவித்தல் - 28.10.2001**

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களால் கூட்டுறவுச் சங்க சட்ட விதி 18 (1) இன் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி திரு. நடராசா பத்மசோதி, கூட்டுறவுச் சங்கப் பரிசோதகராகிய என்னால் மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான விசேட பொதுச்சபைக் கூட்டம் ஒன்று அழைக்கப்படுகின்றது. தவிசாளராகிய எனது தலைமையில் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

**இடம்:-** தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க பிரதம சங்கக் காரியாலயம், கொடிகாமம்.

**காலம்:-** 2001-10-28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

**நேரம்:-** கிளை இல-18 தவசிகுளம் முற்பகல் 10.00 மணி.
கிளை இல-19 உசன் முற்பகல் 11.00 மணி.

**நிகழ்ச்சி நிரல்:-** ★ தவிசாளர் உரை.
★ கிளைக்குழு உறுப்பினர் தெரிவு.

மேற்படி சங்கத்தின் வாக்களிக்கத் தகைமை பெற்ற உறுப்பினர்கள் யாவரும் தவறாது சமுகமளிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

*குறிப்பு: மேற்படி கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான ஒழுங்குகள் 2001-10-14இல் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்தன. போதிய நிறைவெண் இன்மையினால் இக் கிளைகளுக்கான கிளை உறுப்பினர் தெரிவு இடம்பெறவில்லை. எனவே இவ்விசேட கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.*

*கூட்டுறவு அலுவலகம்,*
*இல-857, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*20.10.2001*

ந.பத்மசோதி,
*கூ.ச.பரிசோதகர்.*

(C/18797)

கந்தவனநாதன் துணை

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அன்னை மடியில் 23 - 03 - 1980



மண்ணின் மடியில் 01 - 11 - 2000

## சிவபாலசிங்கம் வேலவமூர்த்தி

*புண்பட்டோர் நோய் தீர்க்கப் புறப்பட்ட புகழ்மணியே!*
*பண்பட்டோர் மத்தியில் பகலவன் போல் நீயிருந்தாய்*
*கண்கெட்ட கோளை நெஞ்சும் கசிந்துருகும் மனங்கொண்டாய்*
*அன்பு மனம் கொண்டவனே ஆயிரத்தில் நீயொருவன்.*

காலஞ்சென்ற எமது மைந்தன் சிவபாலசிங்கம் வேலவமூர்த்தி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் ஐப்பசி மாத பூர்வபக்க ஷஷ்டி திதியில் *இன்று (22.10.2001) திங்கட்கிழமை* எமதில்லத்தில் நடைபெறும். இவ்வைபவத்தில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வந்து கலந்து, மதியபோசனத்திலும் பங்குபற்றிச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பொலிகண்டி,*
*வல்வெட்டித்துறை.*

சி.சிவபாலசிங்கம் குடும்பத்தினர்.
(கிராம அலுவலர்) (93545)

# மந்தகதியில் நடைபெற்று வரும் காணாமற்போனோர் விசாரணை

## உறவினர் பங்குபற்றுவதில் அசிரத்தை

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடத்தப்பட்டு வரும் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் தற்போது மிகவும் மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 8 மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் இந்த விசாரணைகளுக்கென விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் 5 குழுவினர் யாழ்ப்பாணம் வந்து திரும்பியுள்ளனர்.

தற்போது ஆறாவது குழுவினர் இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேசமயம்—

காணாமற்போனோரின் உறவினர்கள் சிலர் கடந்த 8 மாத காலத்தில் 3, 4 தடவைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். என்றும்—

மீண்டும் மீண்டும் விசாரணைகளுக்கு அழைக்கப்படுவதால் விரக்தியடைந்த இவர்கள், தற்போது விசாரணைகளுக்குச் செல்வதைத் தவிர்த்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் யாழ். பொலிஸ் நிலையத்தில் இந்த விசாரணைகளை ஆரம்பித்தபோது சுறுசுறுப்பாக விசாரணைகளுக்கு சமுகமளித்த மக்கள் தற்போது விசாரணைகளுக்குச் செல்வதைத் தவிர்த்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விசாரணைகளுக்காக சிலவேளைகளில் பொலிஸ் நிலையத்துக்கு சமுகமளிக்கும் போது அங்கு தமது வாய் முறைப்பாடுகளைத் தமிழில் நெறிப்படுத்துவதற்கு மொழி பெயர்ப்பாளர்கள் இருப்பதில்லை எனவும்—

இதனால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் காணாமற்போனோரின் உறவினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-4)

## தெல்லிப்பழை சுகாதாரப் பிரிவில்

# மலேரியாவைக் கட்டுப்படுத்த விரைவில் பிரசார நடவடிக்கை

வலிகாமம் தெற்கு, ஒக். 22

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மலேரியா நோய் பரவிவருவதனால் அதனைக் கட்டுப்படுத்தும் பணியில் வைத்திய அதிகாரி பிரிவினர் ஈடுபட்டுவருகின்றனர்.

நுளம்புக் கடியில் இருந்து பாதுகாத்துக் கொள்ள நுளம்பு வலைகளுக்கு இலவசமாக நுளம்புக்கடி எதிர்ப்பு மருந்து தோய்த்து வழங்கி வருகின்றனர்.

மலேரியாவைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் கிராமங்கள் தோறும் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் மூலம் பிரசாரங்களும், நடவடிக்கைகளும் எடுக்கப்பட உள்ளன.

மலேரியாக் கட்டுப்படுத்தல் தொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் அமைக்கப்பட்டுள்ள தொண்டர் குழுவினருக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற உள்ளதாக, பிராந்திய வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க. தா. சிவபாதம் அறிவித்துள்ளார். (க-152)

# பசுக்கன்று வளர்ப்பதற்கு மானிய உதவி கிடைக்கும்

அச்சுவேலி, ஒக். 22

கன்னிப் பசுக்கன்று வளர்ப்பு உதவித்திட்டத்தில் யாழ். மாவட்டமும் இணைக்கப்பட்டுள்ளது.

கன்னிப் பசுக்கன்று வளர்ப்பு மானிய உதவித்திட்டத்தில் சேர்ந்துகொள்ளும் கால்நடை வளர்ப்போருக்கு பராமரிப்புச் செலவில் 50 வீதம் வழங்கப்படவுள்ளது.

செயற்கை முறைச்சினைப்படுத்தல் மூலம் பிறக்கும் ''பசுக்கன்றுகள்'' கன்னிப் பசு வளர்ப்பு உதவித் திட்டத்தில் பதிவு செய்ய தகுதியானவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பசுக்கன்று பிறந்து 14 தினங்களுக்குள் திட்டத்தில் பதிவு செய்யப்படுவதுடன் பசுக்கன்று காப்புறுதி செய்யப்பட வேண்டும்.

பசுக்கன்று வளரும் காலத்தில் இரண்டு வருட காலத்திற்கு பராமரிப்பு வைத்தியச் செலவுகளில் 50 வீதம் மானியத்தொகையாக வழங்கப்படும்.

ஒவ்வொரு பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்கும் குறித்து ஒதுக்கப்பட்ட தொகை பசுக்கன்றுகள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

திட்டத்தில் சேர்ந்து நன்மை பெறவிரும்பும் கால்நடை வளர்ப்போர் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகளைச் சந்தித்து மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-11)

# அரியாலைக்கு நாவலர் வீதியூடாக பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஒக். 22

அரியாலைப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் நன்மை கருதி நாவலர் வீதியூடாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்சேவை கடந்த 15 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

தினமும் இந்த பஸ்சேவை மூன்று தடவைகள் மாம்பழம் சந்தியிலிருந்து நாவலர் வீதி வழியாக யாழ்ப்பாணம் வரை நடைபெற்று வருகின்றது. (ச-ரி)

# இன்று அடிக்கல் நடும் விழா

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்படவுள்ள மூன்று மாடிக்கட்டடத்துக்கான அடிக்கல் நடும்விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டுவைப்பார்.

பாடசாலையின் முன்னாள் ஆங்கில ஆசிரியர் அமரர் நாதனின் மகனான அமரர் காராளசிங்கத்தின் ஞாபகார்த்தமாக அவரது மகன் கா. இந்திரன் இந்தக் கட்டடத்துக்கான நிதியை வழங்கவுள்ளார்.

# கால்நடை வளர்ப்பில் அதிக பயன்பெற விஞ்ஞான செயன் முறைகள் அவசியம்

## கருத்தரங்கில் உதவிப் பணிப்பாளர் உரை

அச்சுவேலி, ஒக். 22

கால்நடை வளர்ப்பில் நவீன விஞ்ஞான செயன் முறைகள் பின்பற்றப்பட வேண்டும். இதன் மூலமே கால்நடை வளர்ப்போர் அதிகளவு நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தின் வடபிராந்திய உதவிப் பணிப்பாளர் பொ. இராமநாதன்.

கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் அச்சுவேலி பல நோ. கூ. சங்கத்தின் தலைமைப் பணிமனையில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கோப்பாய்ப் பிரதேசக் கால்நடை வைத்திய அதிகாரி செல்வி வனிதா தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் உதவிப் பணிப்பாளர் பொ. இராமநாதன் மேலும் தெரிவித்ததாவது:-

கால்நடை வளர்ப்பில் மரபு ரீதியிலான பழைய சிந்தனைகள், நடைமுறைகள் கைவிடப்படவேண்டும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு உற்பத்தி என்பவற்றில் நவீன முறைகளைப் பின்பற்றி முன்னேறி வருகின்றன. ஆனால் எமது பிரதேசங்களில் கால்நடை வளர்ப்பு மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

எமது பிரதேசத்தில் யுத்த நிலையினால்பல பின்னடைவுகள் உள்ளமையும், புதிய கருத்து மாற்றத்தை ஏற்றுக் கொண்டு கால்நடை வளர்ப்போர் அதனைப் பின்பற்றாமல் மரபு ரீதியிலான சிந்தனையுடன் செயற்படுவதும் உண்மையே. இந்த நிலை மாறவேண்டும்—என்றார்.

கரவெட்டி பிரதேச கால்நடைவைத்திய அதிகாரி திருமதி தங்கராசா, வேலணை கால்நடை வைத்திய அதிகாரி செல்வி யூலியானா பிரான்சிஸ், வடபிரதேசக் கால்நடை வைத்திய அத்தியட்சகர் எஸ். தங்கராசா ஆகியோரும் மற்றும் பலரும் உரையாற்றினர். (க-7-11)

# வாக்குகள் எண்ணும் பணி குறித்து ஆணையாளரின் ஆலோசனை

கொழும்பு, ஒக். 22

டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வாக்கு எண்ணும் பணிகளை மறுநாள் காலை ஆரம்பிக்கலாம் என்று சகல கட்சிகளுக்கும் தேர்தல் ஆணையாளர் ஆலோசனை தெரிவித்துள்ளார் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மின்சார நெருக்கடியை நாடு எதிர்கொண்டுள்ள நிலையில், தேர்தல் அலுவலர்கள் இரவு நேரத்தில் பணியாற்றுவதைத் தவிர்க்க முடியும் என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பகல் வேளையில் வாக்குச்சீட்டுக்களை எண்ணும் வேலைகள் நடைபெறும் போது தவறுகளைக் குறைக்க முடியும் என்றார், இம்முறை இந்தியாவில் நடைமுறையிலுள்ளது எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையாளர், சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெறவுள்ளார். இவ்விடயம் பற்றி ஆலோசிப்பதற்கு விரைவில் கட்சிச் செயலாளர்களின் கூட்டமொன்றை அவர்கூட்டவுள்ளார்.

தற்போது வாக்குப்பெட்டிகள் வாக்கு எண்ணும் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டதும் எண்ணிக்கை ஆரம்பிப்பதே வழக்கமாகும். (க)

# 30 ஆயிரம் பனம் விதைகள் வடமராட்சி கிழக்கில் நடுகை

பனை நடுகைத்திட்டத்தின் வடமராட்சி கிழக்கில் 30 ஆயிரம் பனம் விதைகள் நடப்பட்டுள்ளன.

பனை அபிவிருத்திச் சபை இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கிராம அலுவலர்களினால் அடையாளம் காட்டப்பட்ட அரச காணிகளிலும் யூ. என். டி. பி யின் அனுசரணையுடன் குடத்தனையில் நிறுவப்பட்டுள்ள பனைமாதிரிப்பண்ணையிலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அம்பனில் 2 ஆயிரம் பனம் விதைகளும், குடத்தனையில் மாதிரிப்பண்ணை உட்பட 9 ஆயிரம் பனம் விதைகளும், பொற்பதியில் ஆறாயிரம் பனம் விதைகளும், மணற்காட்டில் ஐயாயிரம் பனம் விதைகளும், குடத்தனை வடக்கில் எண்ணாயிரம் பனம் விதைகளும் நடப்பட்டுள்ளன. (க-182)


# கண்ணீர் அஞ்சலி

எங்கள் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயற்குழு உறுப்பினரும், பொன்விழாச் சபை உறுப்பினருமாகிய

## பேராசிரியர் செ. பாலச்சந்திரன்

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம். (92682)

# மரண அறிவித்தல்

டாக்டர் திருமதி

## தெய்வீகராணி இராஜசேகரன்

குருவீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வீகராணி இராஜசேகரன் (வைத்திய நிபுணர்) அவர்கள் 20-10-2001 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற க. காசிவிசுவநாதன் (வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்)—செல்லம்மா தம்பதியினரின் செல்வப்புதல்வியும், இராஜசேகரனின் (வைத்திய நிபுணர்) அன்பு மனைவியும், பிரகாஷ் (City Bank, U. K), டாக்டர் செல்வி மீரா (U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பரமேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை, நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை), கணேசமூர்த்தி (இளைப்பாறிய வர்த்தகவங்கி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), லோகநாயகி, சிறீஸ்கந்தராசா (சவூதி) ஆகியோரின் அருமைச் சகோதரியும், வேல்முருகன (இளைப்பாறிய பிரதம கணக்காளர், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்) புவனராணி, நடராசலிங்கம் (அதிபர், யா/சன்மார்க்க மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்), செல்வராணி (ஆசிரியை, கொழும்பு) டாக்டர் திருமதி தேவி சரவணபவன் (புட்டபர்த்தி, பெங்களூர்), இந்திரா (அவுஸ்திரேலியா), திருமதி யாமினி சத்தியமூர்த்தி (மஸ்கன், கொழும்பு), இருக்கேஸ்வரன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும், டாக்டர் செல்வி ஈசானி (கொழும்பு), பாலமுரளி (கணனிப் பொறியியலாளர், கொழும்பு) ஆகியோரின் சிறியதாயாரும், நர்மதா, மதுசூதனன் ஆகியோரின் பெரியதாயாரும், கஜபதி, இமயவன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (23-10-2001) செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திரு. து. நடராசலிங்கம் (மைத்துனர்)
(அதிபர், யா/சன்மார்க்க மகா வித்தி., யாழ்ப்பாணம்)
திரு. கா. கணேசமூர்த்தி (சகோதரர்)
36, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (93698)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீடியோ ரைற்றில், வீடியோ எடிற்றிங், ஓடியோமிக்சர் கனொன் மல்டியில், புறொக்கிறாம் கமரா (T 70), பினாஸ் 277T, சாம்சன் வீடியோ கமரா ஸ்ராண்ட், ரெலிஜெஸ்ரெலிபோன் FP 1000 (ஜப்பான்) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.வசந்தன், ஸ்ரேசனடி, கடவைப்புலம், சுன்னாகம். (93671)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

பகிரா, சமிரா, பிறிமா இனப் புறொயிலர் குஞ்சுகள் நாளை செவ்வாய் (23.10.2001) மாலை பெற்றுக்கொள்ளலாம். நம்பர் I 32/=. தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.3529, 2867. (93612)

## வீடற்றவன்

வானொலியில் "அவசரக் கல்யாணம்" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: 1. நாடகம் எழுதுவது எப்படி? 2. யாழ்ப்பாணமா! கொழும்பா! 3. யாழ்ப்பாணம் 4. இலக்கியக் கட்டுரைகள் 5. வீடற்றவன் விளக்கமும் விமர்சனமும்.

(93681)

## தவறிவிட்டது

யாழ்.பரியோவான் கல்லூரி மாணவனான கந்தசாமி நிருஜன் என்பவரின் விசேட அ.அ. (இல.0902043320) பாடசாலைக்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி பாடசாலையில் ஒப்படைத்துதவவும். (93677)

## 'யுனிசெவ்' உதவியுடன் மாணவர்களுக்கு மதிய உணவு!

வடமராட்சி கிழக்கு,ஒக்.22

பாடசாலைகளில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் போசாக்குக் குறைந்த மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் இடம்பெயர்ந்த முகாம்களில் வாழும் மாணவர்கள் கட்டாயம் பயன்பெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டத்தில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது பாடசாலைச் சூழல், பெற்றோரின் பொருளாதார நிலை முக்கியமாக கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் வளமான சூழலில் அமைந்துள்ள, வருமானம் கூடிய பெற்றோர்களைக் கொண்ட பாடசாலைகளும் நகர்ப்புறத்தில் உள்ள தேசிய 1-A,B பாடசாலைகளும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-182)

## 850 குடும்பங்களுக்கு மீண்டும் நிவாரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.22

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில் நிவாரணக் கொடுப்பனவுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 850 குடும்பங்களுக்கு மீண்டும் நிவாரணம் வழங்கப்பட உள்ளதாக வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் தெரிவித்தார்.

850 குடும்பங்களும் தன்னிடம் முறையிட்டதையடுத்து, அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் உடனடியாகக் கிடைக்க தான் நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

## மாதிரி வினாத்தாள் பயிற்சி வகுப்பு

பருத்தித்துறை,ஒக்.22

பருத்தித்துறை, மருதங்கேணி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் (தரம் - 11) ஜி.சீ.ஈ. சாதாரண வகுப்பு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வணிகக் கல்வியும் கணக்கீடும் தொடர்பான மாதிரி வினாத்தாள் பயிற்சி வகுப்பு நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்றும்-

இந்தப் பயிற்சி வகுப்பில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார். (க-118)

## பேராசானுக்கு எமது அஞ்சலிகள்



எமது பெருமதிப்புக்கும்
அளப்பரிய அன்புக்கும் உரித்தான
**பேராசிரியர் செ.பாலச்சந்திரன்**
(கலைப்பீடாதிபதி-யாழ். பல்கலைக்கழகம்)
அவர்களின் மறைவையொட்டி துயருறும் இவர்தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழக எழுதுவினைஞர் *தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம்.*

(93688)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக
கலைப்பீடாதிபதி, பேராசிரியர்
**செ. பாலச்சந்திரன்**

அவர்கள் சிவபதமடைந்தமையையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவபீட ஆசிரியர் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(93691)

## கண்ணீர்ப் பூக்கள்



கலைப்பீடத்தின் பெருமகன்
கல்விப்புலத்தின் உயர்மகன் பேராசான்
**அமரர் செ.பாலச்சந்திரன்**

அவர்களின் பாதங்களில் எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

யாழ்.பல்கலைக்கழகம். (93687) கல்வியியற் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியும் புவியியற்றுறை
பேராசிரியருமாகிய
**செ.பாலச்சந்திரன்**

அவர்களின் மறைவையிட்டு அமரருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்திக்கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(93678)

## கண்ணீர்க் காணிக்கைகள்!



20.10.2001 சனிக்கிழமை சிவபதம் அடைந்த
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
கலைப்பீடாதிபதி, பேராசிரியர்
**செ.பாலச்சந்திரன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், இவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இந்துமன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.

(93683)

## கண்ணீர்க் காணிக்கைகள்



எம்முடன் கடமையாற்றும்
செல்வி பாலச்சந்திரன் நளாயினி
அவர்களின் பாசமிகு தந்தையார்
**செ. பாலச்சந்திரன்**
(யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியும் புவியியற்றுறைப் பேராசிரியரும்)

அவர்கள் 20.10.2001 அன்று சிவபதம் எய்தியதையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு, அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருடன் அவர்களின் துயரத்தை நாமும் பகிர்ந்துகொள்வதுடன், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்து நிற்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்,
தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.

(93676)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY



**செல்வி மதுரங்கா**

**22.10.2001**

மீசாலை, கச்சாயைச் சேர்ந்த
**கோணேஸ்வரன் - சகுந்தலாதேவி** தம்பதியினரின்
செல்வப் புதல்வி செல்வி மதுரங்கா

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (22.10.2001) திங்கட்கிழமை கரவெட்டி கிழவிதோட்டத்தில் உள்ள தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

அவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார், அக்காமார், அண்ணா, மச்சான்மார், மச்சாள், தம்பி மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் கச்சாய் கண்ணகை அம்மன் துணை கொண்டு பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

Kones Communication,
Kovil Santhai, Karaveddy.

M.துரைராசா
(அப்பப்பா)

(93686)

## இதய அஞ்சலிகள்!



நேற்றுமுன்தினம்
அமரத்துவம் அடைந்த
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
கலைப்பீடாதிபதி, பேராசிரியர்
**செ.பாலச்சந்திரன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், இவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்துப் பண்பாட்டுக் கழகம், யாழ்.பல்கலைக்கழகம். (93684)



**யாழ்.பல்கலைக்கழக**
கலைப்பீடாதிபதி, பேராசிரியர்
**அமரர் செ.பாலச்சந்திரன்**
அவர்களின்

## நினைவுகள்!

வஞ்சமிலா நெஞ்சம்
வார்த்தைகளிற் கெம்பீரம்;
அஞ்சாத போக்கு,
ஆனால் -
'நானென்ற'
ஆணவமோ உன்னில் இல்லை...
நேருக்கு நேராக
நெஞ்சம் திறந்து
உள்ளவற்றை உள்ளபடி
உரைத்துநின்ற பேராளா!
கள்ளம், கபடம், கரவுஇவை
உன் உள்ளத்தே
எள்ளளவுகூட இருந்ததில்லை;
போலி, நடிப்பு பொருமல்இவை
ஏதுமிலாச் சீரியனே!
புவியின் இயல்பைப்
புரிந்து வழிநடந்தாய்;
நீ பண்ணிய பயிரினிலே
உன் புண்ணியங்கள் கண்டிருந்தோம்
அன்பு மனைவியுடன் அறிவார்ந்த பிள்ளைகளும்
உற்றவரும், சுற்றம், உறவினர்கள், மாணவர்கள்
நண்பர் குழாம்
எல்லோரும்
கதறித் துடித்தலறக் காலன் உனைக்
கொண்டு சென்றான்.
பொன்மனத்துச் சந்திரனே!
புவியளந்த சூரியனே!
உன்பிரிவு எங்கள்
உளத்தை எரிக்கிறது.

(C/18800) - தமிழ்த்துறையினர்.

# தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பை போராளிகளும் ஆதரிக்கின்றனர்

## கூட்டணிப் பிரமுகர் மாவை கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஒக்.22

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பை தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடிவரும் போராளிகளும் மறைமுகமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

நேற்றுக் காலை யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் 'பொதுத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல்', கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீ ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்றது.

அங்கு சிறப்புரை ஆற்றிய போதே மாவை சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக் காலங்களில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் குறைந்து செல்கிறது. அங்கு பேரினவாதிகளின் பிரதிநிதித்துவம் அதிகரித்துவருகிறது.

இந்தப் பேரினவாதிகளையும், அவர்களின் நடவடிக்கைகளுக்கு துணைபோகும் துரோகத் தமிழ்க் கட்சிகளையும் எதிர்வரும் தேர்தலில் ஓரங்கட்டுவதற்காக நாம் கூட்டுச் சேர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நலிவடைந்துள்ள தமிழ் மக்கள் மத்தியில் பேரினவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ள அரசு, தனது பேரினவாத நடவடிக்கைகளுக்கு சில தமிழ்க் கட்சிகளை 'ஏஜெண்டு'களாகப் பயன்படுத்துகிறது.

சட்டத்துக்கு முரணாக - நடைமுறைக்கு விரோதமாக - தாம் விரும்பியபடி லட்சக்கணக்கான ரூபாவை கண்மூடித்தனமாக அள்ளி வீசி, அதில் ஒருபகுதியைத் தாமும் சுருட்டி, 'வேலைவாய்ப்பு என்ற பெயரில் தமிழர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் கட்சியை மக்கள் தூக்கி எறிய வேண்டும்.

கடந்த காலங்களில் தவறான பாதைகளில் சென்ற கட்சிகளைத் திருத்தி தந்தை செல்வாவின் வழியில் இணைந்து செல்வதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

இதனாலேயே ஏனைய தமிழ்க் கட்சிகளையும் இணைத்து தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தோம்.

### இரு கட்சிகளை ஏன் சேர்க்கவில்லை?

இந்தக் கூட்டமைப்பு ஏற்பட்டபோது சில மூத்த பிரமுகர்கள் என்னைச் சந்தித்து ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகளையும் - அவர்களின் தவறுகளையும் அவர்களுக்கு எடுத்து விளக்கி - உங்களது கூட்டமைப்பில் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று கேட்டனர்.

இதற்கு நாங்கள் சம்மதித்தோம்.

ஆனால் புளொட் இயக்கம் தமிழர்களுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் போராளிகளைக் காட்டிக் கொடுப்பதுடன் படையினருடன் இணைந்து அவர்களை அழிக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவருகிறது என்று போராளிகள் எமக்கு அறியத்தந்திருந்தார்கள்.

இதனைவிட தமிழ் மக்களை அரசுக்கு விலைபேசி விற்றுக்கொண்டிருக்கும் ஈ.பி.டி.பியும் தனது தவறை உணர்ந்து, திருந்தி எம்முடன் இணையும் என்ற எதிர்பார்ப்பு - நம்பிக்கை - எனக்கு இல்லை.

### சர்வதேச ரீதியில் ஆதரவு

ஆப்கான் - அமெரிக்க மோதலைச் சாதகமாகப் பயன்படுத்தி, விடுதலைப் புலிகளையும் 'பயங்கரவாதிகள்' என அமெரிக்காவுக்கு இனங்காட்டி, அவர்களை அழிப்பதற்கு அரசு சதி செய்கிறது.

இத்தகைய முயற்சிகளையெல்லாம் முறியடிப்பதற்காகத் தற்போது இணைந்துள்ள எமது கூட்டமைப்புக்கு சர்வதேச ரீதியிலேயே முழுமையான ஆதரவு கிடைத்துள்ளது.

அத்துடன் பல்கலைக் கழக மாணவர் தரப்பு, அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகிய அனைத்துமே எமது கூட்டமைப்பை வரவேற்று அறிக்கை வெளியிட்டுள்ளன.

எனவே தமிழ் பேசும் மக்கள் அனைவரும் எமது கூட்டமைப்புக்கு வாக்களிப்பதுடன் ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகளின் கள்ளவாக்குப்போடும் திட்டத்தையும் முறியடிக்க வேண்டும் - என்றார்.

### சங்கரி உரை

ஆனந்தசங்கரி அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

கடந்த காலங்களில் நாம் விமர்சித்த அமைப்புக்களுடன் இப்போது கூட்டுச் சேர்ந்துள்ளமை குறித்து பலரும் வினாவெழுப்பலாம். எனினும் எமது இனத்தின் பலத்தைக் கூட்டுவதற்கு கூட்டமைப்பு ஓர் அத்தியாவசியமாகக் கருதப்பட்டது.

இக்கூட்டமைப்பு அமையவேண்டும் என்பது தொடர்பாக வெளிநாட்டுத் தலைவர்கள் மற்றும் தூதுவர்கள் உட்படப் பலதரப்பட்டவர்களிடம் இருந்தும் எமக்கு நெருக்குதல்கள் வந்தன.

எந்தவொரு பேரினவாதக் கட்சியுடனும் நாம் ஒப்பந்தம் மேற்கொள்ளவில்லை; மேற்கொள்ளப்போவதுமில்லை. கூட்டணியை யாரும் பதவி கொடுத்தோ, விலை கொடுத்தோ வாங்க முடியாது. நாம் யாருக்கும் 'ஜால்ரா' போடமாட்டோம். எமது நோக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகும். அவ்வாறாயின் புலிகளுடன் பேசினாலேயே அது சாத்தியமாகும்.

எத்தனையோ கட்சிகள் நாடாளுமன்றம் செல்வதற்கு அடித்துப் பிடித்து பாடுபடும்போது -

1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்த வேண்டுமெனக்கோரி தமிழர் விடுதலைக் கூட்டணியின் 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்திருந்தனர். நாம் பதவியாசை பிடித்து ஜனநாயகத்தை விற்பவர்கள் அல்லர்.

கடந்த தேர்தலின் பின்னர் அரசு ஒன்றை அமைப்பதற்கு நான்கு ஆசனங்கள் தேவைப்பட்டபோது அதனை வழங்கி அரசு அமைக்க உதவிய பெருமை டக்ளஸையே சாரும். அப்போதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு நிபந்தனையாக அவர் முன்வைத்திருக்கலாம். அதன் பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகப் பேச்சு எதும் நடத்தக்கூடாது என்று ஜே.வி.பி. நிபந்தனை விதித்தபோது கூட தன்மானம் இன்றி டக்ளஸ் அரசுக்கு முண்டுகொடுத்தார்.

வீட்டுக்கு நஷ்ட ஈடு - மன்னிக்கவும் நஷ்டஈட்டுப் படிவம் - கொடுப்பதும், அடையாள அட்டை வழங்குவதும்தான் இவரின் வேலை. தற்போது வெட்கமின்றி எந்த அரச வந்தாலும் பேரம்பேசி சேவையைத் தொடருவோம் என்கிறார்.

எம்மாலும் பேரம் பேச முடியும். ஆனால் நாம் தன்மானத்தை விற்பவர்களல்லர். இது சந்திரிகா, ரணிலுக்கும் நன்கு தெரியும்.

வெளிநாடுகள் கொடுக்கும் பணத்தைக் கொள்ளையடித்துவிட்டு, மக்களுக்குச் 'சேவையாற்றுகின்றோம்' என்று கூறி, வைரவருக்குக் கோபுரம் கட்டுவதா? ஐந்து லட்சம் ரூபாவுக்கு எழுதப்பட்ட காசோலையின் மிகுதிப் பணம் பின்னர் வழங்கப்படுமாம்.

எத்தனையோ வெளிநாட்டு நிறுவனங்கள் கோடிக்கணக்கான ரூபாய்களைத் தரத் தயாராக உள்ளன. ஆனால் இங்கே உள்ள தரகரைப் பார்த்த அந்நிறுவனங்கள் பணத்தை வழங்கப் பின்னடிக்கின்றன.

நாம் யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி வருவதில்லை என்று கூறுகிறார்கள். அம்மாவின் ஹெலிக்கொப்டர் இருந்தால் நாமும் வந்து போவோம். இனத்துக்காகத் தன்னை அர்ப்பணிப்பதாகக் கூறித் தமிழரை விலைபேசி விற்ற பெருமை டக்ளஸையே சாரும். உலக நாடுகள் மத்தியில் தமிழன் விலைபோகக்கூடியவன் என்ற கருத்தையும் அவரே ஏற்படுத்தியுள்ளார் - என்று ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

### ரவிராஜ் உரை

யாழ்மாநகர முதல்வர் சட்டத்தரணி என்.ரவிராஜ் உரையாற்றுகையில் -

விரும்பியோ விரும்பாமலோ ஒரு கூட்டமைப்பு அமைத்திருப்பதானது இன்றைய காலத்தின் தேவையாகும். இரவு பகலாகப் பாடுபட்டு நமது தலைவர்கள் அமைத்துள்ள இக் கூட்டமைப்பு எந்த ஒரு பேரினவாதக் கட்சிக்கும் துணைபோகமாட்டாது.

பேரினவாதக் கட்சிகளுக்கும், வீணை வாசிப்போர் போன்ற தமிழரை விலைபேசும் சக்திகளுக்கும் நாம் ஒற்றுமையின்றிச் செயற்படுவதன் மூலம் இலாபமடைய வாய்ப்பளித்து விடக்கூடாது.

கடந்த தேர்தல்களில் கிழக்கு மாகாணத்திலே எமது பிரதிநிதித்துவம் குறைந்துபோனது. இக்கூட்டமைப்பின் பிரதிபலிப்பை நாம் கிழக்கிலே இம்முறை காணமுடியும். இக்கட்சிகளின் கூட்டமைப்பு வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்களின் பெருவெற்றியுமாகும்.

தமிழ் மக்கள் சலுகைகளுக்கு விலைபோபவர்கள் அல்லர் என்பதை விரைவில் உணரமுடியும். விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்காது, அதற்கு என்றும் உந்துசக்தியாக நாம் திகழ்வோம் - என்று சொன்னார். (உ-4-9)

## வன்னியில் நினைவுதினம் அனுஷ்டிப்பு

வவுனியா,ஒக்.22

1987 இல் இந்தியப்படையினருடன் இடம்பெற்ற மோதலில் களப்பலியான லெப்டினன்ட் கேணல் சந்தோஸத்தின் 14 ஆவது ஆண்டு நினைவுதினம் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிகளில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியான சந்தோஸம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் திருப்புமுனைத் தாக்குதல்கள் பலவற்றில் பங்குகொண்டவர்.

1987 ஒக்டோபர் 21 ஆம் திகதி இந்தியப் படையினருடன் இடம்பெற்ற ஒரு மோதலில் அவர் உயிரிழந்தார். (ஐ-164)

## ஜி.ஜி.யின் பிறந்ததினவிழா ஏற்பாடு

அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் ஸ்தாபகர் அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் 100 ஆவது பிறந்ததின விழாவை உணர்ச்சிபூர்வமான முறையில் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி வடமராட்சியிலும், 8 ஆம் திகதி யாழ்நகரிலும் பொன்னம்பலத்தின் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு குருநகரில் நிறுவப்படவுள்ளது. (ஐ-9)

## திருத்தம்

நேற்றைய உதயனில் சுன்னாகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் பொதுச்சந்தை இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் தொடர்பான 2002 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் -

சுன்னாகம் மத்திய சந்தைக்குரிய (துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் உட்பட) ஆகக் குறைந்த மதிப்பீட்டுத் தொகை (ஜி.எஸ்.ரி. நீங்கலாக) 19 லட்சத்து 91 ஆயிரம் ரூபா எனவும் -

மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை என்பதை மல்வம் மாட்டிறைச்சிக் கடை எனவும் -

இழுபொறி இயந்திரம்பெட்டியுடன் வாடகைக்கு அமர்த்தும் காலத்தை 01.01.2002 தொடக்கம் 31-12-2002 எனவும் -

திருத்தி வாசிக்குக!




# இதய அஞ்சலி

எமது பிரதேசத்தின் மைந்தனும், தீவகத்தின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்தவருமாகிய

**அமரர் செல்லத்துரை பாலச்சந்திரன்**

(கலைப்பீடாதிபதி)

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை.

உதவி அரசாங்க அதிபரும், பணிமனை உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

(93708)



# கண்ணீர் அஞ்சலி


எமது புவியியற்றுறையின் மூத்த பேராசிரியரும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியுமான

**பேராசிரியர் செ. பாலசந்திரன்**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

4 ஆம் வருட மாணவர்கள், புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்.

(93707)



**நொருங்கிய இதயத்தில் இருந்து வடியும் இரத்தக் கண்ணீரோடு ஒரு மௌன அஞ்சலி**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதியாக ஒளிவிடு மகுடம் எனும்

**பேராசிரியர் செ.பாலச்சந்திரன்**

ஒளியிழந்து மறைந்தது எமக்குப் பேரிழப்பாகும். கலைப்பீட மாமலை சரிந்ததால் கலங்கி நிற்கும் பல்கலைக்கழக சமூகத்தோடு நானும் எனது கண்ணீரை, மறைந்த பீடாதிபதியின் பாதத்தில் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

துயரம் தோய்ந்த விழிகளோடு,

ந.யோகராஜன் S.L.T.E.S.

பிரதிப் பிராந்தியப் பணிப்பாளர்,

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்.

பணிப்பாளர்,

தென்னாசியக் கலைகள் கலாசார நிலையம். (93705)

**ராஜா** யாழ்ப்பாணம்

இன்றுமட்டும் விஜய், சிம்ரன் நடித்த

**ப்ரியமானவளே**

காட்சிநேரம்: 10.30, 2.30 (பி.நே.)

நாளைமுதல்

எம்.ஜி. ஆர்., லதா நடித்த ஸ்ரீதரின்

**உரிமைக்குரல்**

குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்

விசேட காட்சி நாளை 8.00 மணி

காட்சிநேரம்: 10.30, 2.30 (பி.நே.)

(C/18710)

**நாகம்ஸ்** சுன்னாகம்

**THE PLOT**

(ரீல்ஸ்)

(இதுவரை கண்டிராத ஆண்கள், பெண்களுக்கிடையிலான விறுவிறுப்பான கராட்டிச் சித்திரம்)

காட்சிகள்:- 11.00, 2.30, 5.00 (பி.நே.)

(93658)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**புத்தகம் கட்டுபவர்களுக்கான நேர்முகத் தேர்வு**

இன்று (22-10-2001) திங்கட்கிழமை முற்பகல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த மேற்குறித்த நேர்முகத்தேர்வு தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தேர்வுக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- பதிவாளர்.

(C/18803)

# கண்ணீர் அஞ்சலிகள்



**பேராசிரியர் செ.பாலச்சந்திரன்**

இந்த மண்ணில் நிலைத்து வாழ்ந்த புத்திஜீவி தன் விழிகளை மூடிக்கொண்டது ஆழ்ந்த கவலை தருவதாகும்.

இவரது மறைவினால் சோகமடைந்திருக்கும் ஒவ்வொரு வருடனும் எமது கவலையைப் பகிர்ந்துகொள்கிறோம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி.

(C/18804)

# தரைவழித் தாக்குதல் மேற்கொண்ட அமெரிக்கப் படையில் 20பேரை கொன்றதாகத் தலிபான் அறிவிப்பு

பெஷாவர்,ஒக்.22

ஆப்கானிஸ்தானில் தரைவழித் தாக்குதலை மேற்கொண்ட அமெரிக்கப் படையினரில் 25 பேரைத் தாம் கொன்றுவிட்டதாக ஆளும் தலிபான்கள் தெரிவித்தனர்.

அத்துடன் ரொக்கெட்டால் இயக்கப்படும் வெடிகுண்டின் மூலம் அமெரிக்க ஹெலி ஒன்றையும் தாம் வீழ்த்தியதாக தலிபான்கள் கூறியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலையில் தரைவழி அதிரடித் தாக்குதல் நடத்த, கந்தகார் அருகே அமெரிக்கக் கொமாண்டோக்கள் தரையிறங்கியதாகவும் -

அப்போது தலிபான்களுடன் இடம்பெற்ற மோதலில் இருபது முதல் இருபத்தைந்து அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் - தலிபான் கல்வி அமைச்சர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் தரைவழித் தாக்குதலை எதிர்கொள்ளத் தலிபான் படைவீரர்கள் ஆயத்தமாகவே இருப்பதாகவும் -

முன்யோசனையின்றி அமெரிக்கா தரைவழித் தாக்குதலை மேற்கொண்டால் பலத்த உயிரிழப்பைச் சந்திக்க நேரும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ)

## குமாரின் மகனும் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ்மாவட்டத்தில் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் பொது வேட்பாளர் பட்டியலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடும் மூவரில் இருவர் யார் என்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டதாகத் தெரிகின்றது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி மற்றும் குமார் பொன்னம்பலத்தின் மகனான கஜேந்திரகுமார் காங்கேசன் பொன்னம்பலம் ஆகியோரே அந்த இருவருமாவர்.

மூன்றாவது வேட்பாளர் யார் என்பதை காங்கிரஸ் கட்சி இன்னும் ஓரிரு தினங்களில் முடிவு செய்யும் எனத் தெரிகின்றது.

(உ)

## வடக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழந்திருக்கலாம் என்றும் ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இததாக்குதலின்போது கடற்படையைச் சேர்ந்த இரண்டாம் லெப்டினன்ட் ஒருவர் சிறு காயமடைந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

முல்லைத்தீவுக் கடற் பகுதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கடற்படைப் படகுகளை கடற்புலிகள் நேற்று வழிமறித்துத் தாக்கியதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை அங்கு இருதரப்பினரிடையேயும் கடுஞ்சமர் இடம்பெற்றதாகவும் -

இச்சமரில் கடற்படையின் இரு கலன்கள் சேதமடைந்ததாகவும் -

புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

விமானப்படை விமானங்களும் கடற்பகுதியில் வந்து தாக்குதலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9-164)

## புலிகளின் பின்னால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு கட்சிக் கூட்டமைப்பை ஏற்படுத்தினோம்.

விடுதலைப் புலிகளும் பேச்சுக்கு வரக்கூடிய நல்லதோர் சூழ்நிலையில் தேர்தல் வந்துள்ளது.

புலிகளுடன் பேசினால் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். புலிகளின் இணக்கம் இல்லாமல் சமாதானம் இல்லை.

எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் புலிகளுக்குப் பின் னால் தமிழ் சமூகம் முழுவதும் திரண்டுள்ளதைக் காட்ட வேண்டிய தேவை உள்ளது.

அத்தோடு -

செம்மணி புகழ் அம்மணிக்கு வால் பிடிக்கும் கூலிப் படைகளை அம்பலப்படுத்தி அகற்றுவதற்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றுசேர்வது அவசியமாகின்றது - என்றார்.

## தாக்குதல் நடவடிக்கைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லான யுத்தநிறுத்தமே முக்கிய நடவடிக்கையாகும். ஆனால் இது விடயத்தில் இணங்கிப் போகாத போக்கை விடுதலைப் புலிகளும், ஒத்துழைக்க மறுக்கும் போக்கை ஐ.தே.கட்சியும் கடைப்பிடித்தால் அரசு என்ன செய்ய முடியும்?

பரஸ்பர இணக்கத்தின் அடிப்படையில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது பற்றிய அரசின் யோசனை ஒன்று கடந்த ஜூன் நடுப்பகுதியிலேயே நோர்வே அரசு மூலம் புலிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டது. ஆனால அதில் தமக்கு ஈடுபாடில்லை என்பதைப் புலிகள் வெளிப்படுத்திவிட்டனர்.

ஜூலை 24 இல் கட்டுநாயக்காவில் நடந்த தாக்குதலுக்கு முன்னரே இந்த யோசனை முன்வைக்கப்பட்டது. ஆனால் அதன் பின்னரும் இந்த யோசனை செல்லுபடியானதாக இருந்ததை நாம் மறந்துவிடக் கூடாது.

இப்போதும் அந்த யோசனை முன்வைக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. ஆனால் அதற்கு மேல் அரசு என்னசெய்யமுடியும்?

பேச்சுக்கு வருமாறு ஐதேகட்சியும் பொ.ஐ.முன்னணியும் இணைந்து அழைப்பு விடுக்கலாம் என்ற திட்டத்தை அரசு ஐ.தே.கவின் முன் வைத்தது. தேசிய அரசு தொடர்பான பொ.ஐ.மு. - ஐ.தே.க. பேச்சு தோல்வியில் முடிந்த பின்னர் கூட அரசு இத்தகைய அழைப்பை விடுத்தது. ஆனால் ஐ.தே.க. இணங்கவில்லை.

எனவே தற்போதைய நிலையில் பேச்சுக்கான வாய்ப்பு மந்தமாகவே உள்ளது.

பேச்சுக்கு அரசு விரும்புகிறது. ஆனால் புலிகள் தொடர்ந்து மறுக்கின்றனர். இதனால் அவர்களின் உண்மையான நோக்கம் சந்தேகத்துக்குரியதாகின்றது.

இதுதவிர, புலிகளுக்கு புதிதாக ஆயுதங்கள் வந்து இறங்குவதாகவும், சிறுவர்கள் கட்டாய ஆள்சேர்ப்புக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

புலிகளின் மேலும் ஒரு படைவலு அதிகரிப்பை நாம் பார்க்கின்றோமா? என்ன நோக்கத்துக்காக அது? கிழக்கைச் செயல் இழக்க வைக்கவா? அல்லது மிக முக்கியமாக, யாழ்ப்பாணம் மீது மற்றொரு பெரும் தாக்குதலுக்கான கள ஆயத்தமா?

புலிகளின் நோக்கம் என்னவாக இருந்தாலும், தாங்கள் அப்பாவிகள் என்பதை சர்வதேச சமூகத்துக்குக் காட்டும் விதத்தில் அவர்களது பேச்சோ, செயற்பாடோ அமையவில்லை.

நோர்வேயில் அரசு மாறினாலும் இலங்கையில் சமாதான முயற்சியில் மாற்றம் ஏதும் வராது.

அரசு ஏதேனும் பெரும் தாக்குதல் நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வாய்ப்புகள் இல்லை - தற்போதைய சூழ்நிலையைக் குழப்பும் விதத்தில் புலிகள் ஏதும் செய்யாதவரை -

புலிகள் இத்தகைய முயற்சி ஏதும் எடுத்தால் மறுகேள்விக்கே இடமில்லை. அரசு தனது இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் பேண உறுதியான நடவடிக்கைகளை விரைந்து எடுக்கும். இது விடயத்தில் அரசின் உறுதிப்பாட்டை யாரும் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது.

சமாதானம் மலர்வதற்கு சகல வாய்ப்புகளையும் நாங்கள் அளிக்க வேண்டும். அதற்கு குறுக்கே ஆக்கிரமிப்பு முகத்துடன் நாம் நிற்கக் கூடாது - என்றார்.

(உ)

## சகல தரப்புகளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு பேராளர்களின் இந்த மாநாடு அங்கீகாரம் பெறுவதற்காக இந்த மாநாடு கூட்டப்பட்டது.

அங்கு உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது:-

நாட்டுமக்கள் அழிவின் விளிம்பில் - இன்னல்களின் விளிம்பில் - தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். பிரதான கட்சிகள் இணைந்து அமைத்துள்ள ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் மக்களைப் புதுயுகத்துக்குள் கொண்டு செல்லும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன சர்வதேச மட்டத்தில் எமது மக்களின் நிலையை உயர்த்துவதில் வெற்றி கண்டார். பின்னர் பிரேமதாஸா நகர மட்டத்தில் மக்களின் நிலையை மேம்படுத்தினார். எனது தலைமையில் அமையும் புதிய அரசு, கிராம மட்டத்தில் இருந்து மக்களின் நிலையை உயர்த்தப்பாடுபடும்.

1977ஆம் ஆண்டு ஜே.ஆர். பதவியேற்றபோது எழுந்தது போன்ற ஐ.தே.கட்சி அலை தற்போது வீசுகின்றது. எனவே ஐ.தே.க. ஆட்சி அமைபபது நிச்சயம் - என்றார் ரணில்.

(ஐ-3)

## மருந்துத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்ளஸ் அப்பேட்டியில் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பியின் அரசியற் பலத்துக்கு முன்னால் நிற்க முடியாமலேயே கூட்டமைப்பு என்ற பெயரில் கட்சிகள் ஒன்றிணைந்திருக்கின்றன. திருவிழாக் காலத்தில் மூடை முடிச்சுக்களுடன் வந்து கடை திறந்து வியாபாரம் செய்வது போன்று தேர்தல் என்று கேள்விப்பட்டவுடன் இந்தக் கட்சிகள் மக்கள் முன் செல்கின்றன. தேர்தல் முடிந்த கையோடு மீண்டும் மூடை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு திரும்பி விடுகின்றன. இது மக்களுக்குத் தெரியும் - என்றும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ஐ-9)

## தலிபான்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

கடந்த 10 ஆண்டு காலமாக தலிபான் இயக்கத்தின் தலைவராக இருந்துவரும் ஓமர், எங்கிருப்பார் என்பதும் அவரது தோற்றம் எப்படிப்பட்டது என்பதும் இன்றுவரை, வெளியுலகுக்குத் தெரியாத இரகசியமாக இருந்து வருகிறது.

இதேவேளை -

அமெரிக்கப் படைகளின் தரைவழித் தாக்குதல் தீவிரமடைந்திருப்பதை அடுத்து எழுந்துள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து தலிபான் அமைச்சரவை முல்லா முஹம்மட் ஹசன் என்பவரின் தலைமையில் நேற்று அவசரமாகக் கூடி ஆராய்ந்ததாக அறிவிக்கப்பட்டது. (ஐ-9)


## கல்லூரித் தாயின் கண்ணீர் அஞ்சலி



- கல்லூரியின் மூத்த தலைமையாசிரியர் (கல்லூரியின் மூத்த தலமுதல்வர்)
- கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணித்தவர்.
- பல நாடுகளிலும் பரந்துள்ள பழைய மாணவர்களை ஒன்று திரட்டி கல்லூரிக்கும் பிரதேசத்துக்கும் உழைத்து முன்னின்றவர்.
- கல்லூரியையும் பிரதேச மக்களையும் நேசித்து, என்றும் அவர்களது இன்பதுன்பங்களில் பங்கு கொள்பவர்.

இத்தகைய புகழ்பூத்த சேவையாளன்.

எளிமை வாழ்வு வாழ்ந்த பேராசான்.

**யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி**

**பேராசிரியர் செ.பாலச்சந்திரன்**

*அவர்களது*

*மறைவு கேட்டு நாம் மீளாத் துயரில் மூழ்கியுள்ளோம்.*

அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம். அத்துடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக கல்லூரியில் எழுந்தருளியிருக்கும் சிவகாமி சமேத நடராஜப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து, அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- பழைய மாணவர் சங்கம்.

*யா/சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம்.*

*வேலணை.*

(93685)

## கண்ணீர்க் காணிக்கைகள்



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி

**பேராசிரியர் செ.பாலச்சந்திரன்**

அவர்கள்

20.10.2001 சனிக்கிழமை சிவபதமெய்தியதையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தின ருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம், *2ஆம் வருட கலைப்பீட மாணவர்கள்.*

(93706)

## கண்ணீர்க் காணிக்கைகள்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி,

**பேராசிரியர் செ. பாலச்சந்திரன்**



அவர்களின்

மறைவையிட்டு கண்ணீர்க் காணிக்கைகளைச் சமர்ப்பித்து, பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி/முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியங்கள்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(93703)

## சேவை நலன் பாராட்டும் வாழ்த்தும்

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
யாழ்ப்பாணம்



**திரு.த.இராஜதுரை**

*ஆளணி உத்தியோகத்தர் - யாழ்.காரியாலயம்*

*PERSONNEL OFFICER - JAFFNA OFFICE*

எமது கூட்டுத்தாபனத்தில் 38 வருடங்களுக்கு மேல் சிறந்த சேவையாற்றி, நேற்று (21.10.2001) ஞாயிறு முதல் தனது சேவையிலிருந்து ஓய்வுபெறும் எமது ஆளணி உத்தியோகத்தர்

**உயர்திரு.த.இராஜதுரை**

அவர்களை அவரது ஓய்வுக் காலத்திலும் சீரும் சிறப்புடனும் இறை ஆசி பெற்று, பல்லாண்டு காலம் வாழ்க என நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- யாழ்.காரியாலயப் பொறுப்பதிகாரியும் உத்தியோகத்தர்களும்.

*இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,*
*65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.*

(C/18774)

நடைபெறுகின்றது!

A/L - 2002

LOGIC

*துரிதமீட்டல் வினா-விடை வகுப்பு*

S.S. மனோகரன்

உடுவில் மகளிர் கல்லூரி

(Further Education)

(93695)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.